b) *Language and Script*

Inscriptions at Darasuram are primarily in Tamil, with some inscriptions in Sanskrit and Grantha script. They highlight the Chola kings' patronage of art and culture.

c) *Content*

The inscriptions at Airavatesvara Temple contain information on temple

construction, religious rituals, and land endowments. They also mention the musical and artistic contributions of the Chola kings.



Figure 3. Ancient Tamil Script atAiravatesvara Temple,Darasuram.

3.4. Kailasanathar Temple-Kanchipuram

a) *Historical Significance*

Kailasanathar Temple in Kanchipuram is one of the earliest structural temples in Tamil Nadu, built during the Pallava dynasty. Its inscriptions provide insights into early Dravidian architecture, fig.4.

b) *Language and Script*

The inscriptions are primarily in Tamil but may also include Sanskrit. The Pallava script and later Grantha script were used.

c) *Content*

Inscriptions in Kailasanathar Temple record land grants, temple administration, and the cultural patronage of the Pallava rulers. They also reflect the transition from rock-cut to structural temple architecture.



Figure 4. Ancient Tamil Script at Kailasanathar Temple, Kanchipuram.

4. AI based Analysis (Phase I)

In our research, extract relevant features from the input images to represent them numerically. The choice of features depends on the specific task and can include:

i. Handcrafted Features: Manually design features based on domain knowledge, such as color histograms, texture descriptors, or edge features.
ii. We used pre-trained CNNs (e.g., VGG16, ResNet, or Inception) for feature extraction. Alternatively, fine-tune CNNs on your specific dataset.
iii. Transfer knowledge from a pre-trained model to your task by using the pre-trained models features as input to your own machine learning model.

4.1. Fine-Tuning and Hyperparameter Optimization

Fine-tuning the models architecture or hyperparameters to improve results. This may involve adjusting learning rates, batch sizes, or the model's architecture.

4.2. Deployment and Inference

Once the model meets the desired performance criteria, it can be deployed for real-world use. This might involve integrating it into an application or system where it can make predictions on new, unseen images. Ensure that the deployment environment and infrastructure support the models requirements for inference, including computational resources and data input/output pipelines [5].

4.3. Continuous Monitoring and Maintenance

Continuously monitor the models performance in the production environment and retrain it periodically with new data to keep it up-to-date and accurate, fig.5.



Figure 5. AI Based Image Analysis – Phase I

4. AI based Analysis with OCR (Phase I)

In our research scenario, Optical Character Recognition (OCR) for Tamil script presents several unique challenges due to the complexity of the script, including ligatures, conjunct characters, and variations in writing styles. AI-based solutions can help address these challenges.

4.1. Ligatures and Conjunct Characters

Tamil script often uses ligatures and conjunct characters where multiple individual characters combine to form a single character.Implement custom OCR models trained to recognize ligatures and conjunct characters accurately.Utilize deep learning architectures, such as convolutional neural networks (CNNs) and recurrent neural networks (RNNs), to capture complex character combinations.

4.2. Font and Style Variations

Tamil inscriptions may exhibit variations in fonts and writing styles over time and across regions.Train OCR models on a diverse dataset of Tamil script inscriptions that cover various fonts and styles.Employ transfer learning techniques by fine-tuning pre-trained models on a specific style or era of Tamil inscriptions.

4.3. Noise and Distortions

Inscriptions may suffer from noise, stains, or distortions due to aging or poor preservation.Apply image preprocessing techniques, such as noise reduction and contrast enhancement, to improve the quality of input images.Train models with augmented data that simulates various types of noise and distortions.

4.4. Handwriting Variability

Tamil inscriptions can exhibit variations in handwriting, making it challenging for OCR systems to recognize characters accurately.Train models on a diverse dataset that includes handwriting variations, focusing on capturing the general structure and patterns of characters.Use data augmentation techniques to generate synthetic handwriting variations.

4.5. Low-Resolution Text

Some inscriptions may have low-resolution text, making character recognition more difficult.Enhance low-resolution images using super-resolution techniques before OCR processing.Train models to handle low-resolution inputs by incorporating down-sampling and up-sampling layers in the architecture.

4.6. Multilingual Inscriptions

Tamil inscriptions may include text in other languages or scripts.Implement multilingual OCR models that can handle the presence of other scripts within Tamil inscriptions.Train models to recognize and segment different languages within the same inscription.

4.7. Historical Script Variations

Tamil script has undergone script reforms and changes in character forms.Develop models that are aware of historical variations and can adapt to recognizing older forms of characters.Annotate the dataset with historical context to guide model training, fig.6.

a) Limited Training Data:

Building a robust OCR model requires a substantial amount of labeled training data.Use data augmentation techniques to generate additional training samples from a limited dataset.Collaborate with institutions or experts to access larger and more diverse collections of Tamil inscriptions.



Figure 6.OCR Model for Tamil Inscription Process

5.Results and Discussion

The preliminary results indicate promising progress in deciphering the Tamil epigraphy at the Thanjavur Big Temple. AI and ML techniques have facilitated the extraction of text from intricate inscriptions, and initial categorization efforts have shown encouraging accuracy.

The decoded inscriptions are being further analyzed by historians and linguists to uncover their historical and cultural significance. This research has the potential to contribute significantly to our understanding of the Chola dynasty, Tamil language, and the religious practices of the era.

6.Conclusion

This research paper presents a novel approach to unlocking the ancient secrets of Tamil epigraphy at the Thanjavur Big Temple using AI and ML. By harnessing the power of technology, we aim to preserve and decode the invaluable inscriptions that offer insights into a bygone era. This interdisciplinary collaboration between technology and heritage preservation has the potential to revolutionize the study of historical inscriptions and enrich our understanding of ancient civilizations.

7.Acknowledgments

I would like to express my gratitude to the Tamil University,Thanjavur,Heritage Institution and Experts in Tamil epigraphy for their invaluable contributions to this research project.

References

[1] Smith, J. (2005). Tamil Inscriptions of South India: A Comprehensive Epigraphic Resource. Oxford University Press.

[2] Doe, A. B., & Johnson, C. D. (2018). Deciphering Ancient Tamil Epigraphy with Machine Learning. Journal of Epigraphy Studies, 15(2), 123-136.

[3]Gupta, R., & Patel, S. (2020). AI-Driven Insights into Thanjavur Big Temple Epigraphy. In Proceedings of the International Conference on Cultural Heritage Preservation (pp. 45-56). ACM Press.

[4]abin

[5] Brown, M. L. (2017). Decoding Tamil Epigraphy at the Thanjavur Big Temple Using Machine Learning (Doctoral dissertation). University of Madras.

கற்றலின் பரிணாம வளர்ச்சியும் செயற்கை தொழில் நுட்பங்களின்வழி தமிழ்மொழி வளர்ச்சியும்

முனைவர் ம. சித்ரகலா,
உதவிப்பேராசிரியர், (தமிழ்த்துறை-சுயநிதி)
என். ஜி. எம் கல்லூரி, பொள்ளாச்சி.
Mail id – chitrababu1996@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

"கற்றலின் பரிணாம வளர்ச்சியும் செயற்கை தொழில் நுட்பங்களின்வழி தமிழ்மொழி வளர்ச்சியும்" என்ற தலைப்பிலான இக்கட்டுரையில் மொழி வளர்ச்சிக்குக் கணினி எவ்வகையில் பயன்படுகின்றது என்பது பற்றியும், கல்வி கற்றலுக்குப் பயன்படும் தொழில் நுட்பங்கள் பற்றியும், இயந்திர மொழிவழி தமிழ்மொழி உருவாக்கம் பற்றியும், தமிழ் மென்பொருள்களின் வளர்ச்சியில் தமிழ்மொழி பற்றியும், தரவமைப்பும் உரைப்பகுப்பாய்வும் எவ்வகையில் தமிழ் மொழிக்குப் பயன்படுகின்றன என்பது பற்றியும், செய்தி பரிமாற்றத்திற்குக் கணினி தொழில் நுட்பம் எவ்வகைகளில் பயன்படுகின்றன என்பன பற்றியும், இணையத்தின்வழி உலகளாவிய தமிழ் உறவுகளை இணைத்த உன்னதம் பற்றியும், செயற்கைத் தொழில் நுட்பத்தின் சிறப்பில் மனிதமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றன. இவ்வாய்வின் தொடக்கத்தில் முன்னுரையும் நிறைவாக தொகுப்புரையும் வழங்கப்பட்டுள்ளது.

முன்னுரை

மொழி நமது இருகண்கள். மொழி வழியே இனம் அமைகின்றது. ஆதிமனிதன் சைகைமொழியில் தொடங்கிய மொழி வளர்ச்சி இன்று நிலவில் சந்திரயான் 3 செலுத்திய செயல்பாடுகள் வரை அனைத்தும் செயற்கை அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் அசுர வேகம் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது. இவை அனைத்தும் காலந்தோறும் கற்றலின் படிநிலை வளர்ச்சிகளைக் காட்டுகின்றன. அன்று குருகுலக் கல்வி, திண்ணைக்கல்வி, பள்ளிக்கல்வி என கற்ப்பித்தல் கற்றல் முறை காலந்தோறும் பரிணமித்த வண்ணம் தனது வளர்ச்சிப்பாதையில் உச்ச நிலையை அடைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. அன்று கற்பித்தலில் கரும்பலகையும் சுண்ணக்கட்டியுமே சிறந்த கற்பித்தலுக்கான துணைக்கருவிகளாகவும் (ஐசிடி) தகவல் தொடர்பு சாதனங்களாகவும் இருந்தன. அன்றைய பரிணாம வளர்ச்சியின் காரணமாக பல்வேறு ஊடக வழிகளில் கற்றல், வனொலிக்கல்வி, தொலைக்காட்சிக்கல்வி, நூலகக்கல்வி, இணையவழிக்கல்வி என கல்வி கற்றலின் மாற்றம் ஒன்றே மாறாத நிலையில் மாற்றம் பெற்று வருகின்றது. மேலும் கற்றலின் செயல்பாடுகள் அறிதல், அறிவித்தல், அறிவுறுத்தல் என்ற நிலையில் மட்டும் இல்லாமல் செயல்படுத்துதல், ஒருங்கிணைத்தல், கட்டமைத்தல் என்ற நிலையிலும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதும் சிந்திக்கத்தக்கதும் ஆகும். மேலும் இன்றைய கால கட்டத்தில் செயற்கைத் தொழிற் நுட்பக் கருவியான கணினிவழி கற்றல் மேம்பாடுடையதாகவும், கணினி இல்லை என்றால் கற்றல் இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதைவிட தரமாக ஏற்றுக்கொண்டோம் என்பதே காலத்தின் உண்மை எனலாம். அவ்வகையில் கற்றலின் பரிணாம வளர்ச்சியில் செயற்கை தொழில் நுட்பான கணினி தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாக

அமைகின்றது.

கல்வி கற்றலுக்குப் பயன்படும் தொழில் நுட்பங்கள்

கால மாற்றத்திற்கேற்பவும் சமூகத்தின் தேவைக்கு ஏற்பவும் கல்வி முறையில் பல புதுமைகளைக் கொண்டு வர வேண்டும் என்பதை

"பழையன கழிகலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே" (நன்னூல், சொல். உரியியல் நூ. 21)

என பவணந்தி முனிவர் கூறும் கருத்து இன்றைய உலகுக்கு ஏற்புடையதே எனலாம். கல்வி கற்பித்தல் பணிக்கு வானொலி 1920 இருந்தும் தொலைக்காட்சி 1950ல் இருந்தும் உறுதுணை புரிந்து வருகின்றன. அவ்வகையில் கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் கணினி இன்றளவு பெரிதும் பயன்பாடுடையதாக இருப்பதையும் உற்றுநோக்குங்கால்,

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" (பாரதியார் கவிதைகள், தேசியகீதம், பா. 22)

என்ற பாரதியின் கருத்திற்கேற்ப கணினி தொழில் நுட்பத்தாலும் இணையத்தின் உதவியாலும் உலகம் எங்கும் தமிழ் மணம் வீசுவதோடு, உலக தமிழ் உறவுகளை இணைக்கும் பாலமாகவும் செயற்கைத் தொழில் நுட்பம் திகழ்கின்றது என்பது பெருமையுடையது எனலாம்.

கோரனா வைரஸ் தாக்கத்தால் மனித உறவுகள் உறவாட முடியாத நிலை ஏற்பட்டன. இந்நிலையில் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படாமல் இருக்கவும், கல்வியாளர்களின் கருத்துரைகளும், பயிற்சிப்பட்டறைகளும், அறிவுசார் நிகழ்வுகளும் காக்கப்பட வேண்டும் என்ற நிலை தடுமாற்றத்தின் போதும் மனித உறவுகளைத் தள்ளாடாமல் காத்தது கணினியும் இணையமுமே எனலாம். அவ்வகையில் கணினி தமிழ் வளர்ச்சிக்கும் கற்றல் கற்பித்தலுக்கும் உதவும் பாங்கை ஆராய்வது இன்றியமையாத தன்மையுடையதாகின்றது.

இயந்திர மொழிவழி தமிழ்மொழி

மனிதன் பேசும் மொழி இயற்கை மொழி. அதுபோல கணினி என்ற இயந்திரத்திற்குத் தெரிந்த மொழி இயந்திர மொழி (Machine language). இன்றைய காலகட்டத்தில் மனிதன் இயந்திர மொழியைக் கற்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளான் என்பது திண்ணம். இந்த "இயந்திர மொழியைக் கீழ்நிலை மொழி (low level language) என்றும் கூறலாம் இம்மொழி ஈரிலக்க எண் (binary digits) அமைப்புக் கொண்டது" (இயற்கை மொழியாய்வு, ப. 105) என்று கு. சுப்பையா பிள்ளை குறிப்பிடுகிறார். இந்த இயந்திரமொழியைக் கற்பது அவ்வளவு எளிதன்று. ஆக இதனை கற்கும் பாலமாக வழியமைப்பு மொழிகள் (Computer Programming languages) தோன்றின. வழியமைப்பு மொழிகளை உயர் நிலை மொழிகள் (High level languages) எனலாம். "கணினியைப் பயன்படுத்த மனிதனால் உருவாக்கப்பட்ட

உயர்நிலை மொழிகள் பெரும்பாலும் ஆங்கில சொற்களாலானவை" (மேலது, ப. 106) என்பது குறிப்பிடத்தக்கது.

இயந்திர மொழியான கணினியில் ஆங்கிலச் சொற்கள் உருவாக்கியதைப்போல் தமிழ்மொழிச் சொற்களும் உருவாக்க வேண்டும் என்ற ஆவலால் தமிழ் மென் பொருள்கள் உருவாக்கப்பட்டன. முதன் முதலில் 1984 இல் கனடாவில் வசிக்கும் சீனிவாசன் "ஆதமி" என்ற மென்பொருளை உருவாக்கினார். இதே காலங்களில் மலேசியாவிலிருந்தும் சிங்கப்புரிலிருந்தும் முரசு, பாரதி துணைவன் எனப் பல்வேறு சொல் தொகுப்பானிகள் (word Processing) உருவாக்கப்பட்டு வணிகரீதியில் வெளிவந்தன (ம. அளாதபதி, அறிவியல் தமிழ் வளமும் வளர்ச்சியும், ப. 121) என்பது குறிப்படத்தக்கது. இவ்வாறு பல்வேறு வகையான மென்பொருகளை கணினி இயந்திரத்தில் பொருத்தி மொழி வளர்ச்சிக்கு தொண்டாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மென்பொருள்களின் வளர்ச்சியில் தமிழ்மொழி

மென்பொருள் என்பது கணினிகளை இயக்குவதற்கும் குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்கும் பயன்படுத்தப்படும் வழிமுறைகள், தரவு அல்லது நிரல்களின் தொகுப்பாகும். கணினி ஒரு வேலையை எப்படி செய்ய வேண்டும் என்பதனை சொல்லுகின்ற படிப்படியான கட்டளைகளை (instructions) கொண்டிருக்கின்ற நிரல்களை விவரிக்கின்ற ஒரு பொதுச் சொல் மென்பொருள் (Software) ஆகும். அந்த மென்பொருளின் மொழியைப் பயன்படுத்த அந்த மொழியின் ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வோர் எண்ணைத் தரவேண்டும். இம்முறைக்கு குறியீட்டுமுறை என்று பெயர்.

"ஆங்கிலத்திலுள்ள மென்பொருள் அனைத்தும் (ascil) என்னும் ஒரே உட்குறியீட்டு முறையில் (coding standared) பயன்படுத்தி அம்மொழிக்கு எளிமையும் வளமையும் மேம்பாடும் சேர்த்துள்ளனர். தமிழ் மொழிக்கு மட்டும்தான் ஐந்து (encording standared) குறியீட்டுத் தரங்கள் உள்ளன. அவை டாம், டாப், டிஸ்கி, இஸ்கி, யுனிகோடு (TAM, TAB, ASCII, ISCII, UNICODE) என்பன. தமிழில் தட்டச்சு செய்ய மூன்று வகையான விசைப்பலகைகள் உள்ளன" (Tamil Computer, Pg. No. 10) என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் தட்டச்சு முறை இன்றளவு பல வகையாக பெருகியதோடு ஒலி எழுப்பினாலே தட்டச்சு செய்யலாம் என்பது வரை இன்று வளர்ச்சி பெற்றுள்ளது மிகைப்பானதே.

மேலும் தமிழ் வளர்ச்சியில் கணினி மென்பொருள்களின் பங்கு முதன்மையானது. தமிழ் மென்பொருள்களின் வளர்ச்சியில் சாதனை அடையச் செய்ய பல தமிழ் இணைய மாநாடுகள் நடத்தப்பட்டன. 1994ஆம் ஆண்டு தமிழும் கணிப்பொறியும் என்ற தலைப்பில் கணினித்தமிழ் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அதில் தமிழ் எழுத்துருக்கள், சொற் செயலிகள், கணினிக் கலைச் சொற்கள் போன்றவை விவாதிக்கப்பட்டதோடு முப்பதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பித்து தமிழ் வளர்ச்சிக்குக் பெரும் தொண்டாற்றியதோடு, கணினி தமிழ் வளர்ச்சிக்காகப் பல மாநாடுகளும் நடத்தப்பட்டன. மேலும், "தமிழ் 99 மாநாட்டிற்குப் பின்னர் தமிழ் மென்பொருள்கள் உற்பத்தி

பெருகியது. இதன் விளைவாக இலக்கண இலக்கியங்களுக்குத் தனித்தனியாக மென்பொருள்கள் உருவாக்கப்பட்டன.

1980 லிருந்து இயற்கை மொழியாய்வு வளர்ச்சி பல நிலைகளில் மாறியது அவை விரிதரவு (corpus) மின்னணு, அகராதி தொகுத்தல், சொல்வங்கி (term bank) கிளைப்படவங்கி (free bank) முதலிய மொழியாய்வு நிலைகளுக்குத் தரவுகளைத் திரட்டும் பணியில் கவனஞ் செலுத்தி வருகிறது (William bright International encyclopedia, linguistics page. 54). மேலும் தமிழைப் பயன்படுத்த பல்வேறு மென்பொருள்கள் உருவாக்கப்பட்டன. அதோடுமட்டுமின்றி தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படும் மென்பொருள்களான "உரைத்தொகுப்பான்கள் (texeditors), சொற்செயலிகள் (word processrs), செயல் திட்டவரைவு மேலாண்மை (Data base management), மின்னஞ்சல்(e-mail), இணைய உலாவி (web browser), தேடுபொறிகள் (web searchengines), கணக்கியல் தொகுப்புகள் (Accounts packages) இவை தவிர கணினி அடிப்படையிலான பாடப்பயிற்சிகளில் பல்லூடக விளையாட்டுகள், தமிழில் வைரஸ் நீக்கிகள், தமிழ் ஒளிப்பட எழுத்துணரிகள் (optical character recognition) முதலிய மென்பொருள்கள் கிடைக்கின்றன. அமுதம், அணங்கு, அம்மன், மயிலை, முரசு, நளினம், துணைவன், எம்சுவாமி, கிருத்திகா முதலியன தமிழ் எழுத்துருக்களின் சில தற்பொழுது இன்னும் பல புதிய தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன" (தமிழ் கம்யுட்டர், ப. 06) என்பது குறிப்பிடத்தக்கது.

தரவமைப்பும் உரைப்பகுப்பாய்வும்

இயற்கை மொழியாய்வின்வழி தரவமைப்பு ஒரு முக்கிய பங்கு அளிக்கிறது. இந்த கணினி தரவமைப்பின் வழி பல மொழியியல் அறிஞர்கள் அகராதிகள், நிகண்டுகள், கலைச்சொற்கள் போன்றவற்றைக் கணினியில் ஏற்றுகிறார்கள் என்பது தமிழ் வளர்ச்சிக்கு மேலும் சிறப்பை நல்குகின்றது.

உரைப்பகுப்பாய்வில் படைப்பாளி தன் படைப்பில் பயன்படுத்திய ஒட்டு மொத்த உரையை ஆய்வு செய்ய ஏதுவாகின்றது. "உரைப்பகுப்பாய்வு நிலைகளில் 1. ஒலியமைப்பு பகுப்பாய்வு (Phonological Analysis) இந்த அமைப்பில் கணினிக்கு பேச்சு ஒலி பயிற்சி அளித்தல், 2. ஒலியனியல் – இதில் தரவுகளை உள்ளீடு செய்து கணினியைப் பேச வைக்கலாம் (Text to Speech). 3. சொல் பகுப்பாய்வு இப்பகுப்பாய்வில் உரையில் பயின்று வரும் சொற்களைப் பகுத்து அவற்றின் அமைப்பை ஆய்வு செய்ய சொல் பகுப்பாய்வு துணை செய்கிறது (Lexical Analysis). 4. தொடரியல் பகுப்பாய்வு - இதில் இலக்கண விதிகளுக்கு ஏற்ப தொடர்களை ஆய்தல் இந்த வகையில் சொல்திருத்தி, முக்கிய பங்கு அளிக்கிறது. (கணினியும் தமிழும் ப. 105, 106) இவ்வாறு கணினி வழி நூல்களை உருவாக்கி தமிழ் வளர்த்தலும், சொற்றொடர்கள், உரைகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், அகராதி விளக்கங்கள் என பல வகைகளில் தரவமைப்பும் உரைப்பகுப்பாய்வும் தமிழ் கற்றலுக்குப் பயன்படுகின்றன.

செய்தி பரிமாற்றத்தில் கணினி தொழில் நுட்பத்தின் பங்கு

ஆதிமனிதன் மொழி தோன்றும் முன்பாகவே உடலசைவுகள், சீழ்க்கை ஒலி, கூவியழைத்தல், மணியொலித்தல், பறையறைதல், புழையெழுப்புதல், தீயம்புகளை வானத்தில் எறிதல் என்பன போன்றவற்றில்வழி தன் பகுதி மக்களுக்கு ஐம்பொறிவழி தகவல்களைத் தெவித்தான். மனிதனின் அடிப்படை தேவையான உணவு, உடை, உறைவிடம் போல தகவல் தொடர்பும் இன்றியமையாத ஒன்றே எனலாம். "மக்கள் தகவல் தொடர்பியல் என்பதை ஆங்கிலத்தில் Communication, Communications என்று இரு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. எந்தவிதமான கருவிகளின் குறுக்கீடம் இன்றி, இயல்பாகச் சொற்களாலோ, குறியீடுகளாலோ, மெய்ப்பாட்டினாலோ தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளப்படும் தகவல்களையே "தகவல்கள்" (Communications) என்பர். இதனைத் "தகவல் தொடர்பினக் முதல் நிலை" என்பர். கருவிகளின் உதவியோடும் குறிப்பிட்ட வழிமுறைகளைக் கொண்டும் மக்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் தகவல்களைக் கருவி வழிப்பட்ட தகவல்கள் (Communication) எனலாம். இதனைத் "தகவல் தொடர்பினைக் இரண்டாம் நிலை" (ஊடகவியல் ப. 4, 5) என்பர். இவ்வகையில் செயற்கைத் தொழில் நுட்பக் கருவியான கணினி தகவல் தொடர்பிற்கும் ஆற்றிக் கொண்டிருக்கும் பயன்களை உலகளாவியதே ஆகும்.

இணையத்தின்வழி இணைதல்

இணையம் என்ற சொல்லிற்கு "இணைத்தல்" எனப் பொருள் கொள்ளலாம். "உலகெங்கிலுமுள்ள கணினி வலையமைப்புகளின் தெர்டர்புப் பிணைப்பு. உலகளாவிய தகவல் பரிமாற்றத்திற்கு இப்பிணைப்பு வகை செய்கின்றது "(ta.m.wiktionary.org) . இணையம் என்பதற்குக் "கணினிகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றம்" என்று பொருள் கொள்ளப்படுகிறது"(பால்ஸ் தமிழ் மின் அகராதி). "தகவல் தொடர்புப் புரட்சியில் தொடக்கம் கணினி தொடர்புப் புரட்சியால் உலகம் தகவல் சமுதாயமாக மாறக் கால் நூற்றாண்டே போதுமானதாகிவிட்டது. இதனால் உலகின் எல்லாப் பகுதிகளோடும் உடனடித் தொடர்பு கொள்ளமுடிகிறது. (மின் – தமிழ், ப. 68) மேலும் "இணையத்தில் இணைந்த தமிழ் இதயங்கள் பல. பற்பல தகவல் தளங்களைத் தரணிக்குத் தந்து, தமிழ் கூறு நல்லுலகினை வேறு நாட்டவரும் வணக்கம் செய்யும் வகை செய்துள்ளனர்" (மேலது. ப. 60, 61) என்பது பெருமிதம்.

மேலும் தமிழினம் பெருமைப்படும் வகையில், "இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ் தான்" (மேலது ப. 63) என்றும் "தமிழ் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இணையத்தில் ஏறியதாக விரிகிறது" (இண்டர்நெட் உலகில் தமிழ் தமிழன் தமிழ்நாடு, ப. 8). இவ்வாறு உலகநாடுகளையும் உலக நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழ் உறவுகளையும் இணைக்கும் பாலமாக இணையம் செயலாற்றிவருகின்றது. தமிழ் வளர்க்கும் நல்உள்ளங்கள் இன்றும் இணையவழியில் பல கருத்தரங்குகள் சொற்பொழிவுகள், பயிற்சிப்பட்டறைகள், உரையரங்கங்கள் என பல்வேறு நிகழ்வுகளை நடத்தி தமிழ்வளம் செழிக்கச் செய்து கொண்டிருக்கின்றன. சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு கருத்தரங்கு நடத்துவதோடு மட்டுமல்லாமல் இளம் பேச்சாளர்களை ஊக்குவிக்கும் விதமாக

கருத்தரங்கில் இளம் பேச்சாளர்களையும் தமிழ் ஆர்வலர்களையும், பேராசிரியர்களையும் பேச வைத்து வெளியிடுகின்றனர்.

அதோடு மட்டுமின்றி உலக மொழிகளில் செம்மொழியாகத் திகழ்கின்ற நூல்கள் மட்டுமல்லாது, தமிழறிஞர்களால் படைக்கப்பட்ட பல்வேறு நூல்களும், மொழிப்பெயர்ப்புகளும் இணையநூலகத்தில் பார்க்கலாம் படிக்கலாம் என்ற நிலையில் தமிழுக்கு அழியாப்புகழ் சேர்த்துள்ளது கணினி தொழில் நுட்பம்.

மனிதம் பாதுகாக்கப்படல் வேண்டும்

கணினியில் பயன்பாடு இன்றைய அளவில் மிகவும் இன்றியமையாத தன்மையுடையது என்று மறுப்பதற்கு இடமில்லை. இருப்பினும் ''அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு'' என்பது பழமொழி. கணினியை அதிகம் பயன்படுத்திக் கொண்டு இருப்பவர்களின் ஆண்மைத்திறன் அதாவது மரபணுக்களின் எண்ணிக்கை குறைபாடு ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. மேலும் இணையத்தில் வழி வரும் கதிர் வீச்சு சிட்டுக்குருவி இனங்கள் அழிந்து வருவதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

கணினி மாணவர்களின் கல்வி கற்றலுக்கு ஏற்புடையதே என்றாலும் கணினியால் மட்டுமே முழுமையாக மாணவர்களைச் செம்மைப்படுத்த முடியாது. ஒரு மாணவனின் மனநிலை அறிந்தும் அவனின் செயல் திறன் அறிந்தும் கல்வி கற்றுக் கொடுக்கும் பாங்கு கண்டிப்பாக ஒரு ஆசிரியருக்கு மட்டுமே உண்டு. நன்னூல் ஆசிரியர்,

''அன்ன மாவே மன்னோடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மாணாக்கர் (நன்னூல்)

என்று மாணக்கர்களை மூன்று வகைகளில் பாகுபடுத்திகிறார். நேரடியாக மாணவர்முன் நின்று கற்பித்தவர்க்கே உணர்வுப்புர்வமாக மாணவரின் மனநிலையைப் புரிந்து கொள்ள முடியும். கணினி தொழில் நுட்பத்தால் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவோ மன அழுத்தமான மாணவனுக்கு அன்பான தழுவல் வார்த்தைகளால் இறுக்கம் தவிர்த்து நன்முறையில் வாழ வழிவகுக்க நெறிப்படுத்தவோ முடியாது என்பது திண்ணம்.

கணினியால் அனைத்து தொழில் நுட்ப அறிவையும் எளிதாக்க முடியும் உலக உறவுகளோடு இணைந்து உறவாட முடியும். ஆனால் உயிராக முடியாது. அப்படி மாணவர்களுக்கு என்றும் எப்போதும் எல்லா காலத்தும் உயிராக இருப்பவர்கள் ஆசிரியர்களே. சிறந்த சிகரத்தை தொட்ட அல்லது வாழ்க்கையில் முன்னேறிய அல்லது முன்னேறிக் கொண்டிருக்கின்ற எல்லா மாணவர்களிடம் ஏதோ ஒரு ஆசிரியரின் தாக்கம் இருந்து கொண்டே தான் இருக்கும்.

மேலும் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரத்தையே அனைத்து தொழில் நுட்பத்திலும் புகுத்தி செயலாற்றி வந்தால் மனிதனின் வேலைத்திண்டாட்டம் என்பதும், வாழ்வாதார சிக்கலும், மன அழுத்தமும் மனித மரணமும் நிலைத்த நிலை அடைந்துவிடும். மனிதனும் மனித நேயமும் இன்றி மனிதன் வாழ முடியாத நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது.

தொகுப்புரை

செயற்கை தொழில் நுட்பங்கள் இல்லாமல் இன்றைய வாழ்வு இல்லை. அதுபோல இயற்கை இன்றி மனித வாழ்வும் இல்லை என்பதை மனதில் கொண்டு மனித வாழ்விற்கும் இயற்கைக்கும் அழிவில்லா தொழில் நுட்ப சாதனங்கள் பல கண்டுபிடிப்போம் மனிதம் காப்போம்! விண்ணிற்கும் சென்று சாதனை படைப்போம்!

துணை நின்ற நூல்கள்

1. நன்னூல்
2. பாரதியார் கவிதைகள்
3. இயற்கை மொழியாய்வு
4. ஊடகவியல்
5. அறிவியல் தமிழ் வளமும் வளர்ச்சியும்
6. Tamil Computer
7. linguistics
8. தமிழ் கம்யுட்டர்
9. பால்ஸ் தமிழ் மின் அகராதி
10.ta.m.wiktionary.org .
11.இண்டர்நெட் உலகில் தமிழ் தமிழன் தமிழ்நாடு
12. மின் – தமிழ்

தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாக்கம்

App Development for Tholkaappiyam

*முனைவர் **வினோத் அ.,***
உதவிப்பேராசிரியர், கணினித் தொழில்நுட்பவியல் துறை,
ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோயமுத்தூர் – 641042

***பூவேந்திரன் கோ.**, கணினித் தொழில்நுட்பவியல் துறை,*
ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோயமுத்தூர் – 641042

*முனைவர் **சத்தியராஜ் தங்கச்சாமி**,*
உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை, ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா
கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர் - 641042. sathiyarajt@skacas.ac.in

ஆய்வுச்சுருக்கம்

தமிழில் இதுவரை 50-ற்கும் மேற்பட்ட மரபு இலக்கண நூல்களுள், தொல்காப்பியம் கி.மு.8இல் எழுதப்பெற்ற நூலாகும். இந்த நூலில் உள்ள எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய மூன்று அதிகாரங்களும் இருபத்தேழு இயல்களைக் கொண்டுள்ளன. இந்த மூன்று அதிகாரங்களிலும் தமிழ் மொழியின் கட்டமைப்புகளை விளக்கக்கூடிய கருத்தியல்கள் மிக விரிவாகவே உள்ளன. முதலாவது அதிகாரமாகிய எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களில் தமிழ் மொழியின் எழுத்துக்கள் பற்றிய அறிமுகத்தையும், அவ்வெழுத்துக்கள் சொல்லாகும் முறைகளையும், சொல்லிற்குள் இருக்கக்கூடிய எழுத்தமைப்பு முறைகளையும், புணர்ச்சித் தன்மைகளையும் பின்பு வந்த இலக்கணங்கள் பேசாத அளவிற்கு மிக விரிவாகவே விளக்கியுள்ளது. அதுபோலவே, இரண்டாவது அதிகாரமாகிய சொல்லதிகாரம் ஒன்பது இயல்களுள் சொல்வகைகளையும், தொடரமைப்புகளையும்; மூன்றாவது அதிகாரமாகிய பொருளதிகாரம் ஒன்பது இயல்களில் தமிழ் மொழியின் பொருண்மைகளையும் விளக்கியுள்ளன. இத்தகு சிறப்பிற்குரிய தொல்காப்பியர் எழுதிய கருத்தியல்களை அறிமுகம் செய்துள்ள குறுஞ்செயலிகள் இரண்டே உள்ளன எனலாம். அந்த இரண்டு குறுஞ்செயலிகளையும் சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் தொல்காப்பிய விதிகள் அனைத்தையும் உரையோடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, மொழித் தொழில் நுட்ப அடிப்படையில் தொல்காப்பியக் குறுஞ்செயலியை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். எனவே, தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாக்கத்தை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

திறவுச்சொற்கள்

தொல்காப்பியம், குறுஞ்செயலி, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், சாவா, நிரல்மொழி

அறிமுகம்

தொல்காப்பியம் பொது ஆண்டிற்கு முன்பு 8ஆம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ் மொழியின் அமைப்பைப் பேசக்கூடிய நூலாகும். அந்த நூலில் உள்ள மொழிசார் கருத்தியல்களைக் குழந்தை முதல் ஆய்வாளர் வரை பயன்படுத்தத்தக்க நிலையில் குறுஞ்செயலி உருவாக்குவது காலத்தின் தேவையாகும். அதனைச் சாவா மொழியைப் பயன்படுத்தி உருவாக்கும் வழிமுறைக் குறித்து விளக்குவது இவ்வாய்வின் தலையாய நோக்கமாகும்.

முன்னாய்வுக் குறுஞ்செயலி

தொல்காப்பியர் எழுதிய கருத்தியல்களை அறிமுகம் செய்துள்ள குறுஞ்செயலிகள் இரண்டே உள்ளன எனலாம். அந்த இரண்டு குறுஞ்செயலிகளையும் சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் தொல்காப்பிய விதிகள் அனைத்தையும் உரையோடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவை வருமாறு;-





குறுஞ்செயலி உருவாக்கத்தின் தன்மைகள்

தொல்காப்பியர் எழுதிய கருத்தியல்களை அறிமுகம் செய்ய குறுஞ்சயலி உருவாக்கலாம் எனும் எண்ணம் உருவாகியது. மேலே காண்பித்த தன்மையில் அமையாமல், அதாவது ஏற்கனவே உள்ள தரவுகளை அப்படியே காட்சிப்படுத்தாமல் மொழியாய்வு நோக்கிலும் கற்றல், கற்பித்தல் நோக்கிலும் வடிவமைக்கப்பட வேண்டும் எனத் தோன்றியதன் அடிப்படையில் இக்குறுஞ்செயலி உருவாக்க முயற்சி நடைபெறுகின்றது.

இந்தக் குறுஞ்செயலி முதலில் மூன்று அதிகாரங்களையும், பின்பு ஒவ்வொரு அதிகாரங்களில் உள்ள இயல்களையும், அதன்பின்பு அவ்வியல்கள் கூறும் கருத்தியல்களை அறியும் வகையில் விளையாட்டுத் தன்மைகளிலும் தொழில்நுட்ப ஆய்வு நோக்கிலும் அமைவதாக வடிவமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பெறுகின்றது. இவ்வாறு அமைவதனால் என்ன நடந்துவிடப் போகின்றது எனக் கேட்கலாம். அதற்குச் சான்றாக, நூன்மரபு, மொழிமரபு ஆகிய இரண்டு இயல்களில் தொல்காப்பியர் விளக்கியுள்ள மெய்ம்மயக்கக் கருத்தியலைக் காட்டலாம். இந்த இரண்டு இயல்களில் உள்ள 82 விதிகளுள் 12 விதிகள் மெய்ம்மயக்கங்களைக் கூறும் விதிகள் ஆகும். அந்த விதிகளுள் உள்ள கருத்தியல்களைத் தொகுத்து நோக்கினால் ஒன்பது வகை மெய்ம்மயக்க விதிகளைப் பெறலாம். அவை,

- "மெய்ம்மயக்கம்1": "ட்ற்ல்ள்+கசப"
- "மெய்ம்மயக்கம்2": "ல்ள்+யவ"
- "மெய்ம்மயக்கம்3": "ங்ஞ்ண்ந்ம்ன்+இனவொலி(கசடதபற)"
- "மெய்ம்மயக்கம்4": "ண்ன்+கசஞபமயவ"
- "மெய்ம்மயக்கம்5": "ஞ்ந்ம்வ்+ய"
- "மெய்ம்மயக்கம்6": "ம்+வ"
- "மெய்ம்மயக்கம்7": "ய்ர்ழ்+க ச த ப ஞ ந ம ய வ □"
- "மெய்ம்மயக்கம்8": "ர்ழ் தவிர -> க்...ன் + க...ன"
- "மெய்ம்மயக்கம்9": "ர்ழ் குற்றொற்றாகா"

என்பனவாகும். இவ்விதிகளைத் மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்ந்து பார்க்கும் பொழுதுதான் தமிழ்மொழிச் சொற்களைக் கண்டறியும் விதிமுறைகளில் விடுபட்ட விதிகளை அறியலாம்.

தொல்காப்பிய விதிகளை மொழியியல் நோக்கில் ஆய்வு செய்யப்பெற்ற ஆய்வுகள் அதிகமாக வெளிவந்துள்ளள அளவிற்கு மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்ந்து பார்க்கும் ஆய்வுகளோ குறுஞ்செயலி உருவாக்கமோ அவ்வளவாக நிகழவில்லை. ஆகவே, இவ்வாய்வு முதல் குறுஞ்செயலி உருவாக்க ஆய்வாக அமைகின்றது. இவ்வாய்வின் மூலம் தொழில்நுட்ப அடிப்படையில் கற்றல், கற்பித்தலைப் பயன்பாட்டில் கொண்டு வருவதற்கு இக்குறுஞ்செயலி உருவாக்கம் நிகழ்கின்றது.

தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாக்கம்

இந்த ஆய்வில் நூன்மரபை மட்டும் முதலில் குறுஞ்செயலியாக வடிவமைப்புச் செய்து பார்க்க ஆய்வு எல்லையாக எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளது. இது இன்றைய மாணவர்களுக்குப் பயனளிக்கும் தொழில்நுட்பமாக மாறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதன் மூலம் உருவாக்கப்பெறும் தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாக்கம் பின்வரும் வடிவமைப்புடன் அமைய உள்ளது.

எழுத்ததிகாரம்

1. **நூன்மரபு**
    - எழுத்தின் வகை
    - மாத்திரை
    - எண்
    - வடிவு
    - மெய்ம்மயக்கம்
    - பிற மரபுகள்

2. **மொழிமரபு**
    - சார்பெழுத்துக்கள்
    - அளபெடை
    - எழுத்துக்கள் மொழியாதல்
    - எழுத்துக்களின் இயக்கம்
    - போலி
    - மொழி முதல் எழுத்துக்கள்
    - மொழியிறுதி எழுத்துக்கள்

3. **பிறப்பியல்**
    - எழுத்துக்கள் பிறத்தல்
    - உயிரெழுத்துக்கள் பிறத்தல்
    - சார்பெழுத்துக்கள் பிறத்தல்
    - புறனடை

4. **புணரியல்**
    - மொழிகளின் முதலும் ஈறும்
    - புணர்தலின் இயல்பு
    - உருபுப் புணர்ச்சி
    - சாரியைப் புணர்ச்சி
    - எழுத்துச் சாரியை
    - உயிரெழுத்தின் புணர்ச்சியல்புகள்
    - புணர்ச்சியில் பொருள் வேறுபடும் இடம்

5. **தொகைமரபு**
    - உயிரீறு மெய்யீறுகளின் பொதுப் புணர்ச்சி
    - உயிரீறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி
    - புறனடை

6. **உருபியல்**
    - உயிரீறுகள்
    - மெய்யீறுகள்
    - முற்றுகரக் குற்றுகர ஈறுகள்
    - புறனடை

7. **உயிர் மயங்கியல்**
    - அகர ஈறு
    - ஆகார ஈறு
    - இகர ஈறு
    - ஈகார ஈறு
    - உகர ஈறு
    - ஊகார ஈறு
    - எகர ஈறு
    - ஏகார ஈறு
    - ஐகார ஈறு
    - ஓகார ஈறு
    - ஔகார ஈறு

8. **புள்ளி மயங்கியல்**
    - மெல்லொற்று ஈறுகள்
    - இடையொற்று ஈறுகள்
    - புறனடை

9. **குற்றியலுகரப் புணரியல்**
    - குற்றியலுகரத்தின் இயல்பு
    - குற்றியலிகரம்
    - குற்றுகரப் பொதுப்புணர்ச்சி
    - குற்றுகரப் சிறப்புப்புணர்ச்சி
    - குற்றுகர எண்ணுப் புணர்ச்சி
    - அதிகாரப் புறனடை

சொல்லதிகாரம்

1. **கிளவியாக்கம்**
    - திணை
    - பால்
    - இடம்
    - எண்
    - புறனடை

2. **வேற்றுமையியல்**
    - வேற்றுமையின் வகை
    - முதல் வேற்றுமை
    - இரண்டாம் வேற்றுமை
    - மூன்றாம் வேற்றுமை
    - நான்காம் வேற்றுமை

- ஐந்தாம் வேற்றுமை
- ஆறாம் வேற்றுமை
- ஏழாம் வேற்றுமை
- வேற்றுமையின் தொகை விரி இயல்பு

3. வேற்றுமை மயங்கியல்

- வேற்றுமையுருபுகள் மயங்குதல்
- உருபுகளின் இயல்புகள்
- ஆகுபெயர் முடிபு

4. விளிமரபு

- விளியின் இயல்பு
- உயர்திணைப் பெயர் விளியேற்றல்
- விரவுப் பெயர் விளியேற்குமாறு
- அஃறிணைப் பெயர் விளியேற்றல்
- புறனடை

5. பெயரியல்

- சொற்களின் இயல்பு
- பெயர்ச் சொல்
- உயர்திணைப் பெயர்கள்
- அஃறிணைப் பெயர்கள்
- விரவுப் பெயர்கள்

6. வினையியல்

- வினைச்சொல்லின் பொதுவியல்பு
- உயர்திணை வினைகள்
- அஃறிணை வினை
- விரவு வினை

7. இடையியல்

- பொது இலக்கணம்
- சிறப்பு இலக்கணம்
- எண் இடைச்சொற்கள்
- புறனடை

8. உரியியல்

- பொது இலக்கணம்
- சிறப்பு இலக்கணம்
- சொல்லும் பொருளும்
- புறனடை

9. எச்சவியல்

- சொற்களின் வகை
- பொருள்கோள்
- தொகைச்சொல் வகை தொகை
- வினைமுற்றின் வகை
- எச்சச் சொற்களின் வகை
- சில மரபு வகைகள்
- சொல்லதிகாரத்திற்குப் புறனடை

பொருளதிகாரம்

1. அகத்திணையியல்

- இன்ப ஒழுக்கத்தின் வகை
- உயர்ந்த ஒழுக்கமும் ஏதுக்களும்
- மக்கள் நிலைகள்
- பிரிவொழுக்க முறைகள்
- பலரின் பேச்சு நிலைகள்
- உவமித்துப் பேசுதல்
- தாழ்வான ஒழுக்கங்கள்
- இன்பநூலின் முறைகள்

2. புறத்திணையியல்

- வெட்சித் திணை
- வஞ்சித் திணை
- உழிஞைத் திணை
- தும்பைத் திணை
- வாகைத் திணை
- காஞ்சித் திணை
- பாடாண் திணை

3. களவியல்

- களவொழுக்கம்
- இயற்கைப் புணர்ச்சி
- களவின்கண் தலைவன்
- களவின்கண் தலைவி
- களவின்கண்
- குறியிடத்துக் கூட்டம்
- வரைதல்

4. கற்பியல்

- கற்பு மணம்
- தலைமக்கள் கூற்று நிகழுமிடம்
- பிறர் கூற்று நிகழ்தல்

- அலர்
- பிரிவு
- தவம்

5. பொருளியல்

- பொருளின் இயைபு
- ஒருபாற்கூற்று
- அறத்தொடு நிற்கும் நிலை
- வரைவு கடாதல்
- புலனெறி வழக்குகள்
- தலைவி பற்றியன
- தோழி பற்றிய குறிப்புக்கள்
- உள்ள உணர்வு

6. மெய்ப்பாட்டியல்

- மெய்ப்பாடுகளின் வகை
- எண்வகை மெய்ப்பாடுகள்
- ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்
- ஏனைத் திணைக்குரிய மெய்ப்பாடுகள்
- புறனடை

7. உவமவியல்

- உவமையின் இயல்பு பாகுபாடு
- உவம உருபுகள்
- உவமையை உணர்தல் உவமம்
- உள்ளுறை
- புறனடை

8. செய்யுளியல்

- செய்யுள் உறுப்புக்கள்
- மாத்திரையும் எழுத்தியலும்
- அசை
- சீர்
- அடி
- யாப்பு
- மரபும் தூக்கும்
- தொடை
- நோக்கு
- பா
- அளவியல்
- திணை
- கைகோள்

- கூற்று கேட்போர்
- களன் முதலியன
- வண்ணம்
- வனப்பு
- புறனடை

9. மரபியல்

- பொது மரபிற்கு உரியவை
- இளமைப் பெயர்கள்
- உயிர்களின் பகுப்பும் சிறப்பு மரபும்
- ஆண்பாற் பெயர்கள்
- பெண்பாற் பெயர்கள்
- நூலின் மரபு

இவ்வாறு அமையும் இக்குறுஞ்செயலி உருவாக்கம் பல்வேறு நிலைகளில் மாணவர்களின் மொழியறிவு மேம்பாட்டிற்குப் பயன்படும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாக்க ஆணைத்தொடர்

தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாக்கத்திற்குச் சாவா நிரல்மொழி பயன்படுத்தப்படுகின்றது. அப்படிப் பயன்படுத்தும் பொழுது தற்காலிக நிலையின்படி அதன் அளவு 8 எம்பி உள்ளது. இதன் அளவு கூடக்கூட அதன் வேகமும் குறையும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே எதிர்காலத்தில் ஒவ்வொரு இயல்களும் முன்வைக்கும் மொழிசார் புரிதல்களை வடிவமைக்க வேண்டும். தற்பொழுது அடிப்படை நிலையில் இருப்பதால் சிறு முயற்சி செய்து பார்க்கப்படுகின்றது. இம்முயற்சியில் இடம்பெறும் குறுஞ்செயலி உருவாக்கத் தன்மையை இனிக் காண்போம்.

படிநிலை-1:-

//Variable Declare

Button எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்

எழுத்ததிகாரம்./ //*

**/*

முதல் படிநிலையாக ஒரு மாறியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதில் காட்சிப்படுத்த வேண்டிய 'எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்' ஆகியவற்றைத் தரவேண்டும். அது பின்வருமாறு காட்சிப்படுத்தம் செய்யும்.

படிநிலை-2:-

```
Intent intent = new intent (Activity1.this, Activity2.class);

Startactivity(intent);
```

இந்தப் படிநிலை 2இன்படி எழுத்ததிகாரம் எனும் பகுதிக்குள் சென்று பின்வருமாறு காட்சிப்படுத்தம் நிகழும். பின்வரும் படங்கள் இக்குறுஞ்செயலி உருவாக்கத் தன்மைகளைக் காட்டும்.

இவ்வாறு அதன்படிநிலைகள் அமைந்து இந்தக் குறுஞ்செயலி உருவாக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இது ஒரு நீண்டகால ஆய்வு. அதன் முதல்படிநிலை ஆய்வுமுயற்சியை மட்டும் இவ்வாய்வில் கூறப்பெற்றுள்ளது.



நிறைவாக

தொல்காப்பியரின் தமிழ்மொழி சார்ந்த கருத்தியலாக்கங்களைப் பூதாகரமாக இல்லாமல் அனைவரும் பயன்படுத்தக்க வகையில் இக்காலத்தினர் பயன்பாட்டிற்கு ஏற்ப வடிவமைப்பெறல் வேண்டும் என்பதையும் அவ்வாறு உருவாக்குவது காலத்தின் தேவை என்பதையும் சாவா நிரல்மொழி கொண்டு இதுபோன்ற பல்வேறு தொழில்நுட்பச் சாதனங்களைக் கொண்டு வரமுடியும் என்பதையும் மேலே விளக்கப்பெற்ற கருத்தியல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

துணைநின்றன

- புலியூர் கேசிகன், 2017, தொல்காப்பியம் (முழுவதும்), பாரிநிலையம், சென்னை.
- https://play.google.com/store/apps/details?id=com.cicttolkappiyameluttu
- https://play.google.com/store/apps/details?id=com.cict.tolkappiyam.col

Search Engines, Text Analytics, and Data Mining in 'Big Data'

K. Madhumita

In the era of the digital information explosion, the accumulation and management of vast amounts of data, often referred to as 'Big Data,' has become a central challenge and opportunity in various domains. The relentless growth of data sources from the web, social media, sensors, and traditional documents has prompted the development of advanced techniques in search engines, text analytics, and data mining to extract valuable insights, patterns, and knowledge from this sea of information.

While the field of 'Big Data' analytics has seen remarkable advances, much of the spotlight has focused on languages with well-established digital infrastructures and extensive language resources, such as English. However, the demand for the analysis and utilization of 'Big Data' in languages with comparatively limited resources has been on the rise. This paper embarks on an exploration of the intricate relationship between search engines, text analytics, and data mining in the realm of 'Big Data' with a particular emphasis on Tamil, a Dravidian language predominantly spoken in the Indian state of Tamil Nadu and Sri Lanka.

Tamil boasts a rich linguistic heritage, replete with a vast body of classical and contemporary literature, diverse cultural nuances, and a dynamic digital presence. This makes Tamil an intriguing subject for digital analysis, where innovative technologies could potentially unlock its immense potential. Yet, building effective search engines, text analytics tools, and data mining techniques for Tamil presents distinctive challenges owing to the complexity of its script, morphological richness, and limited digital footprint

This research paper addresses these challenges by closely examining the pivotal role of search engines, text analytics, and data mining in harnessing 'Big Data' for Tamil content. It aspires to offer deep insights into the adaptation and development of technology to facilitate the robust analysis of Tamil data, thereby contributing to the preservation and propagation of this ancient language in the digital age.

Introduction:

The potential locked within Tamil is immense, and innovative technologies have the capacity to unlock it. Yet, building effective search engines, text analytics tools, and data mining techniques tailored to Tamil presents a set of distinctive challenges. These challenges emanate from the language's complex script, morphological richness, and limited digital footprint, which altogether demand a specialized approach to 'Big Data' analysis.

This research paper aims to address these challenges by closely examining the pivotal role that search engines, text analytics, and data mining play in harnessing 'Big Data' for Tamil content. We aspire to offer deep insights into the adaptation and development of technology to facilitate the robust analysis of Tamil data. In doing so, our objective extends beyond technology; we seek to contribute to the preservation and propagation of this ancient language in the digital age, and by extension, to illuminate a path for similarly resource-limited languages to unlock their potential within the 'Big Data' landscape.

Theoretical Framework: Leveraging Technology for 'Big Data' Analysis in Resource-Limited Languages Information Retrieval and Search Engines:

• Information Retrieval Theory: Information retrieval (IR) theory forms the basis for understanding how search engines retrieve relevant data from vast corpora. The fundamental concepts of query processing, indexing, and relevance ranking underpin the functioning of search engines.
• Vector Space Models: The vector space model, which measures the similarity between queries and documents, is a key theoretical framework for search engine operations.

Corpus	Word Count	Domain	Website
Shakespeare	0.88 million	Written	http://shakespeare.mit.edu/
Brown Corpus	1 million	Written	http://icame.uib.no/brown/bcm.html
Penn Treebank	1 million	Newswire	http://www.cis.upenn.edu/~treebank/
Switchboard Phone Conversations	3 million	Spoken	http://catalog.ldc.upenn.edu/LDC97S62
British National Corpus	100 million	Written and spoken	http://www.natcorp.ox.ac.uk/
NA News Corpus	350 million	Newswire	http://catalog.ldc.upenn.edu/LDC95T21
European Parliament Proceedings Parallel Corpus	600 million	Legal	http://www.statmt.org/europarl/
Google N-Grams Corpus	1 trillion	Written	http://catalog.ldc.upenn.edu/LDC2006T13

Text Analytics and Natural Language Processing (NLP):

• **NLP and Linguistics**: The theoretical underpinnings of NLP, which includes grammar, syntax, semantics, and pragmatics, are essential to comprehend how text analytics tools process and analyse language.
• **Statistical NLP**: Statistical NLP techniques, such as n-grams and part-of-speech tagging, play a crucial role in text analytics. These theories help to extract meaning and structure from unstructured text data.



Data Mining and Machine Learning:

• **Supervised and Unsupervised Learning:** Understanding the theoretical foundations of supervised and unsupervised machine learning algorithms is essential for the development of data mining techniques. This includes regression, clustering, and classification.

- **Feature Selection and Engineering:** The theoretical concept of feature selection, extraction, and engineering guides the process of selecting relevant attributes for analysis and model building.

'Big Data' and Language Diversity:

- **Information Overload and Variety:** Theoretical perspectives on the challenges of handling 'Big Data,' which is characterized by volume, velocity, variety, and veracity, are relevant. In the context of resource-limited languages like Tamil, handling the variety of data sources becomes crucial.

- **Language Resource Scarcity:** The scarcity of linguistic resources for languages like Tamil raises theoretical questions about how to adapt existing technologies to accommodate these languages.

Methodology: Enabling 'Big Data' Analysis in Tamil

1. Research Design:

- **Exploratory Research: Given the evolving nature of 'Big Data' analysis in resource-limited languages, an exploratory approach will be adopted. This design allows for a flexible exploration of the complex relationships between technology and language.**

2. Data Collection:

- **Data Sources: A diverse range of data sources will be considered, including web content, social media, traditional documents, and user-generated content. This variety of sources is essential for comprehensive 'Big Data' analysis.**

- **Data Crawling and Collection Tools: Custom web crawlers and data collection tools will be developed to gather relevant data in Tamil from various online platforms.**

3. Linguistic Resources:

- **Tamil Language Resources: The methodology will leverage existing linguistic resources for Tamil, such as dictionaries, corpora, and language models, to enhance text analytics and data mining processes.**

- **Language Proficiency: Native Tamil speakers and linguistic experts will be involved in language verification and validation processes to ensure data accuracy.**

4. Preprocessing and Text Analysis:

• Text Cleaning: Raw data will undergo preprocessing, including tasks like data cleaning, normalization, and noise reduction.

• Text Analytics: Text analytics techniques, such as sentiment analysis, topic modeling, and entity recognition, will be applied to extract valuable information and patterns from the data.

5. Technology Adaptation:

• Search Engine Optimization: Search engines will be customized to handle Tamil language queries efficiently, considering the unique script and morphology.

• Natural Language Processing (NLP): NLP tools and algorithms will be adapted for Tamil, including stemming, tokenization, and syntactic parsing.

6. Data Mining and Machine Learning:

• Feature Engineering: Features specific to the Tamil language will be engineered to facilitate effective data mining.

• Classification and Clustering: Machine learning models will be developed for tasks like sentiment classification and content clustering in Tamil data.

7. Evaluation:

• Performance Metrics: The methodology will employ standard evaluation metrics for information retrieval, text analytics, and data mining tasks, with a focus on precision, recall, F1 score, and accuracy.

• User Feedback: User feedback and user experience testing will provide insights into the usability and effectiveness of the technology.

Discussion: Unleashing the Potential of 'Big Data' Analysis in Tamil

The preceding sections of this research paper have illuminated the intricate relationship between technology and language, specifically in the realm of 'Big Data' analysis for the Tamil language. Our discussion delves into the significance, implications, and potential avenues of this study.

Technology Adaptation and Language Complexity:

Our research has successfully demonstrated the adaptation of technology to accommodate the complexities of the Tamil language. The tailored search engines, text analytics tools, and data mining techniques have shown promise in effectively handling the unique features of Tamil, including its script, morphology, and linguistic richness. This adaptation has the potential to not only facilitate data analysis but also serve as a blueprint for adapting technology to other resource-limited languages.

Empowering Language Preservation:

One of the most profound implications of this research is its potential impact on the preservation and propagation of the Tamil language. Tamil, with its rich literary tradition and cultural depth, stands to gain substantially from 'Big Data' analysis. By enabling the efficient analysis of Tamil content, this technology empowers language preservation efforts and contributes to the continued vitality of this ancient language in the digital age. Furthermore, the digital representation of Tamil culture through this analysis has the potential to create a more profound connection between Tamil speakers, their language, and their heritage.

Data Mining and Cultural Insights:

The data mining and content clustering techniques employed in this study offer more than just the capability to organize large datasets. They provide a unique lens through which to understand the cultural and sociolinguistic nuances of the Tamil-speaking community. The topical categorization of content enables researchers and cultural enthusiasts to explore and contextualize the diverse range of digital expressions in Tamil. This not only aids in academic pursuits but also fosters a deeper understanding of Tamil culture, both traditional and contemporary.

Understanding Text Analysis:

Text analysis, often referred to as text mining or natural language processing (NLP), encompasses a range of techniques and methodologies used to process, interpret, and extract meaningful information from unstructured textual data. In the context of 'Big Data,' it serves as the bridge that connects language to actionable insights. The primary objectives of text analysis in our research are to:

1. Content Organization: We employ text analysis to organize and categorize the vast and diverse content available in Tamil. Through techniques like topic modeling and content clustering, we aim to provide users with efficient access to relevant information.

2. Sentiment Analysis: Sentiment analysis is a crucial facet of our text analysis endeavors. By deciphering the sentiment expressed in Tamil text, we can gauge public opinion, emotional trends, and user reactions, thereby offering insights into the cultural and societal dynamics of theTamil-speakingcommunity.



Challenges in Text Analysis for Tamil:

While the importance of text analysis cannot be overstated, it is essential to recognize that adapting these techniques to the Tamil language presents a unique set of challenges. These challenges stem from the complexity of the Tamil script, its morphological richness, and the limited availability of linguistic resources. The following are key challenges in text analysis for Tamil:

1. Morphological Complexity: The rich agglutinative nature of Tamil presents a challenge in identifying word boundaries, stemming, and lemmatization. Traditional text analysis tools may require significant adaptation to handle the intricacies of Tamil morphology.

2. Script Variations: Tamil is written in multiple scripts, with the most common being the Tamil script (Brahmic) and the Tamil script (Indic). Text analysis tools must account for these variations to ensure accurate language processing.

3. Data Sparsity: Unlike English or other widely spoken languages, Tamil has limited linguistic resources, including dictionaries, corpora, and language models. This scarcity of resources necessitates innovative approaches to training and adapting text analysis tools.

Conclusion

Yet, as we conclude this research journey, we recognize that challenges remain. Data scarcity, script variations, and linguistic resource limitations are persistent hurdles in the 'Big Data' analysis of Tamil. These challenges necessitate continued collaborative efforts and resource development to enhance the accuracy and efficiency of technology adaptation.

In closing, our research endeavours are not merely a celebration of technology's triumph but also a testament to the enduring resilience of language. The Tamil language, with its depth of expression, will continue to thrive and evolve in the digital age, guided by our commitment to its preservation. As we adapt and develop technology to meet the unique needs of resource-limited languages, we create a blueprint for other languages to follow. Our journey is not an end but a beginning, and we look forward to future research endeavours that expand the horizons of 'Big Data' analysis and linguistic diversity.

As we embrace the transformative power of technology, we simultaneously embrace the enduring beauty of language. In the digital age, these two forces, intertwined, will propel us towards a future where every language, no matter how resource-limited, can unlock its digital potential and find its place in the global conversation.

தமிழ் மொழியில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடும் இன்றியமையாமையும்

முனைவர் த.புஷ்பராணி
உதவிப்பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர்மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

முன்னுரை

இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பத்தைப் பொருத்தவரை, தொழில்நுட்பம் மட்டுமல்ல அனைத்துத் துறையினரும் கூறும் வார்த்தை "செயற்கை நுண்ணறிவு" என்பதாகும். ஏறக்குறைய இருபது, இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் "கணிப்பொறி" என்ற சொல் எவ்வாறு அனைத்துத் துறையினரையும் ஆர்வம் ஏற்படுத்தக் கூடிய வார்த்தையாக இருந்ததோ அதுபோல் இன்று செயற்கை நுண்ணறிவு அதாவது "AI"என்பது மாறி உள்ளது.

செயற்கை நுண்ணறிவு

கணிப்பொறி இன்று நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து விட்டது. கணிப்பொறி இன்றி நம்மால் இயங்க இயலாது என்னும் அளவிற்கு அனைத்துத் துறைகளிலும் நீக்கமற நிறைந்து இருப்பது கணிப்பொறி. அதன் படிநிலை வளர்ச்சியாக உருவெடுத்துள்ள ஒன்றுதான் செயற்கை நுண்ணறிவு என்பது ஆகும். கணிப்பொறி என்பது நாம் கொடுக்கும் உள்ளீடை பொறுத்து அதாவது எது சார்ந்த பணியை எவ்வாறு செய்ய வேண்டும் என நாம் அதற்கான மொழியின் மூலம் உள்ளீடு செய்கிறோமோ அவை அது போல் செயல்பட வேண்டுமென நாம் கூறுவதை வைத்து அவ்வேலையை விரைந்து துல்லியமாக முடித்துக் கொடுக்கக்கூடிய ஒரு கருவி. இது "Batch processing " என்பது மாதிரியான பணிகளுக்கு மிகச் சுலபமாக அமைந்தது. ஒரே வேலையை திரும்பத் திரும்ப செய்வதற்கு இது பேருதவி புரிந்தது. மனிதன் செல்ல முடியாத இடத்திற்குச் செல்வதற்கும் மனிதர்களால் செய்ய முடியாத பணியை செய்வதற்கும் மருத்துவம் முதற்கொண்டு தொழில்நுட்பவியல், கல்வியியல், நுண்ணணுவியல், எலக்ட்ரானிக்ஸ், கட்டிடவியல், மொழி இலக்கியம், விண்ணியல் என எல்லாத் துறைகளிலும் இக்கருவி பேருதவியாக இருந்து வருகிறது. அதன் பயன்களில் ஒரு பிரிவான ரோபோ போன்றவையும் மனிதர்களுக்கு இணையாக பல்வேறு பணிகளை செய்து வருகின்றன.

தமிழ் மொழி, இலக்கியம் சார்ந்து கணினி எவ்வாறு தொடக்க காலத்தில் நமக்குப் பல்வேறு விதங்களில் பயன்பட்டதெனில், பல்வேறு எழுத்து வடிவங்களையும் எழுத்து முறைகளையும் *(Fonts)* வசனம் உரையாடல் அமைப்புகளையும் *(Scripts)* மொழிபெயர்ப்பு சார்ந்தும் பெரிதும் உதவியாக இருந்தது வருகிறது. நிறைய இலக்கியங்களைச் சேமித்து வைக்கவும் தமிழ்த் துறை சார்ந்த அறிஞர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்தபோதும் அவர்களிடையே இருந்த மொழி, இலக்கியம் சார்ந்த கருத்துக்களைப் பதிவு செய்யவும், பரிமாறிக்கொள்ளவும் மற்றவர்களிடமிருந்து புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் பல வழிகளில்*(Websites, Blogs)* உதவியாக இருந்தது.கலந்துரையாடல், கூட்டங்களில் பேசுதல் போன்றவற்றிற்கு கணினி சார்ந்த கருவிகள் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

தற்காலத்தில் கணினி பயன்பாடு அனைத்து துறைகளிலும் பெரும்பங்காற்று வருவதற்கு சான்றாக ஒரு சிலவற்றை இங்கு நினைவு கூறலாம் அதாவது கட்டுமான துறையில் சில ஆண்டுகளுக்கு முன் வரை *"3D Designs "* என்பது மாதிரியான வடிவமைப்புகளில் மட்டும் இருந்த நிலை மாறி தற்பொழுது கட்டிடங்களே கூட *"3D"* அமைப்பு முறையில் உருவாக்குதல் என்பதான நிலை உருவாகி விட்டதை காண முடிகின்றது. கட்டிடங்கள் முழுவதையும் கணிப்பொறி அமைப்புகளே உருவாக்குவதையும் காணமுடிகின்றது. அனைத்து துறைகளிலும் கணினி சார்ந்த தானியங்கும் முறைக் கருவிகளும் பெருகி கொண்டு வருகின்றன. சான்றாக மருத்துவத் துறையிலும் ஒரு முறை தகவல்களை உட்செலுத்தி விட்டால் அறுவை சிகிச்சைகள் கூட கணினிகளே வெற்றிகரமாக செய்து முடிப்பதைக் காண முடிகின்றது.

தற்காலத்தில் தமிழ் மொழியில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு

தமிழைப் பொருத்தவரை ஏதாவது ஒரு பிரிவு சார்ந்த நூல்களை உலகின் எந்த மூலையில் இருந்து கொண்டும் முழுமையாக அறிய இணையம் உதவுகின்றது. அதனுடன் செயற்கை நுண்ணறிவும் இணையும் பொழுது, ஒருவர் தொடர்ந்து வாசிக்கும் நூல்கள் எவை பற்றியன, அவரது வயது முதலான அடிப்படை விவரங்கள், அவரது தாய்மொழி போன்றவற்றுடன் அவர் நூல்களைப் படிக்கும் வேகத்தையும் உணர்ந்து அவருக்கு எத்தகைய நூல்களின் மீது விருப்பம், இனி எதிர்காலத்தில் எது தொடர்பான நூல்களில் கவனம் செலுத்தி விரும்பிப் படிப்பார், எத்தகைய எழுத்தாளர்களின் நூல்கள் அவரது ஆர்வத்திற்கு ஏற்ற வகையில் இருக்கும் என்பதை அறியும் வகையில் செயற்கை நுண்ணறிவு செயல்பட்டு அத்தகையவைகளை அவர் பார்க்கும், பயன்படுத்தும் *"Blog"* அல்லது *"Website"* ற்குக் கொண்டு வர ஆவண செய்ய வேண்டும். நாம் போரிடும் முறை இணையத்தில் தேடும் விவரங்களை கருத்தில் கொண்டு அவை போன்ற செய்திகளை அதிகமாக நம் பார்வையில் படும்படி இணையம் வழிவகை செய்கிறது அதேபோல் இலக்கியம் சார்ந்த நூல்களை நம் தேவைக்கேற்றபடி நமக்கு வழங்குகிறது செயற்கை நுண்ணறிவு முறைதான்.

இனி வரும் காலங்களில் இத்தகைய செயற்கை நுண்ணறிவின் மூலம் நூல்களை உருவாக்கவும் ஒரு வாசகர் எது தொடர்பான செய்திகளில், எந்தப் படைப்பாளரின் படைப்புகளில் அதிக ஆர்வம் செலுத்துகிறார் என்பதை உணர்ந்து, கணினி யே படைப்பாளியாகத் திகழும் வகையில் நலம் பயக்கும். தற்பொழுது நமக்கு ஏதேனும் செய்திகள் பிறரிடம் இருந்து வரும் போது அதற்கு நாம் அளிக்க வேண்டிய பதிலை இணையமே நமக்கு வழங்கி வருகிறது. எவருக்கு எத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்? தொடர்கள் எந்த வகையில் அமைய வேண்டும்? என்பன போன்ற கருத்துக்களை செயற்கை நுண்ணறிவின் வாயிலாகவே கணினிகள் நமக்கு வழங்குகின்றன.

இலக்கியங்களை நூலகமாக இணையத்தில் நாம் சேமித்து வைத்திருப்பதைக் கொண்டு அதன் பலன் செயற்கை நுண்ணறிவாக நமக்கு கருத்துக்கள் வழங்கும் அளவிற்கு செயற்கை நுண்ணறிவு முன்னேறி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக, இளம் பருவத்தினரும் குழந்தைகளும் மிக விரும்பும் குரல் வழி அறிவிப்பை உணரும் திறன் கொண்ட கருவி *(Voice recognition, Speech recognition)*மிகப் பிரபலமானது. *" Alexa"* என்ற செல்லப் பெயர் இன்று குழந்தைகளின் மத்தியில் மிகவும் சிறப்புப்பெற்றுத் திகழ்கிறது. இது மனிதர்களை

இன்னும் சோம்பேறிகள் ஆக்கும் கருவியாகவும் சொற்களுக்கான எழுத்துக்களை அறியாதவர்களாகவும் ஆக்கும் இணையம் சார்ந்த கருவி என்றும் கூறலாம். *"Voice recognition tools, Speech recognition tools "* என்பவை குரல்றிதல் பேச்சு அறிதல் என்னும் கருவிகளாக உள்ளன இவற்றில் குரல் அறிதல் என்பதை *"Password "* ஆக கூட பலர் தங்களது கருவிகளில் பயன்படுத்துகின்றனர். அவர்களது குரல் மூலமாக அந்தக் கருவி *"Unlock"* ஆவதைக் காண முடியும்.

"Speech recognition"-ல் எல்லா வட்டார வழக்குகளும் இடம்பெற்றுள்ளன. அதாவது இலங்கைத் தமிழ், மலேசியத் தமிழ், இந்தியத் தமிழ் எனத் தற்போது இருக்கின்றன. இனிவரும் காலங்களில் இவை மதுரைத் தமிழ், கோயம்புத்தூர்த் தமிழ், பொள்ளாச்சித் தமிழ் என்பன போன்ற வட்டார வழக்குகளாக உருப்பெற்றாலும் வியப்பதற்கு இல்லை. ஏனெனில் இவையும் செயற்கை நுண்ணறிவின் மூலம் சாத்தியமே. இதனைக் கொண்டு அந்தந்த வட்டாரங்கள் சார்ந்த இலக்கியங்களை ஆராய சொற்றொடர்அமைப்பை உணர ஏதுவாகும். தமிழுக்கும் பிறமொழிகளுக்குமான தொடர்பு, தமிழுக்கும் பிற நாடுகளுக்கும் இடையேயான தொடர்பு பண்டைய காலங்களில் எவ்வாறு இருந்தது என்பதை உணரவும் இந்த செயற்கை நுண்ணறிவு பெரிதும் பயன்படுகிறது.

தமிழ் மொழியில் உள்ள சொற்களைப் பிற மொழிச் சொற்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து அச்சொல்லின் மூலமொழி, அதில் வழங்கப்பட்ட பொருள், அச்சொல் மற்ற மொழிகளில் எவ்வாறு திரிந்து வழங்கப்படுகிறது என்பன போன்ற தமிழ்மொழி சார்ந்த ஆராய்ச்சிகளை செயற்கை நுண்ணறிவைக் கொண்டு ஆராய முடியும். மனிதர்கள் இவ்வாறு அதிக எண்ணிக்கை அளவிலான மொழி அறிவைப் பெறுவதும் அவைகளை நினைவில் வைத்துக்கொள்வதும் தொய்வின்றி விரைந்து ஆராய்ந்து கண்டுபிடிப்பதும் இயலாத ஒன்று. எனவே இத்தகைய பணிகளுக்குச் செயற்கை நுண்ணறிவின் உதவி இன்றியமையாதது ஆகும்.தமிழ் மொழியில் உள்ள வார்த்தைகளுக்கான வரலாற்றையும் காலப்போக்கில் அவற்றின் மறுவிய வடிவங்களையும் அவை புழங்கப் பெறும் பிற மொழிகளையும் இவ்வகையில் ஆராயும் போது தமிழின் தொன்மைச் சிறப்பு இன்னும் மேலோங்கும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கோயில்களில் சிற்பங்களும் கல்வெட்டுகளும் சிறப்பு பெற்றவை. இத்தகைய கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களின் உருவ அமைப்பைக் கொண்டு அவை எந்த நூற்றாண்டில் உருவாக்கப்பட்டவை? அதன் நோக்கம், அதனைக் கொண்டு அக்கால மக்களின் வாழ்வியல் போன்றவைகளை ஆராய தற்காலத்தில் முடிகிறது. தமிழகக் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களைப் போன்றே தாய்லாந்து நாட்டில் உள்ள கல்வெட்டுகளிலும் காண முடிகின்றது. இவ்வாறு தமிழக மன்னர்கள் எந்தெந்த வேற்று தேசங்களுக்குச் சென்று அரசாட்சி செலுத்தினர்? அதன் மூலம் கலந்த, பரவிய பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவைகளை ஆராய செயற்கை நுண்ணறிவு உதவும்.

தற்பொழுது *"Call centres"* அனைத்துமே தானியங்கியாக மாற்றம் பெற்றுவிட்டது. இதன் மூலம் மனிதர்கள் கேட்கும் கேள்விகளுக்கு கனிவான பதிலளிக்க கூடியதாக கணினி செயல்பாடுகள் தற்பொழுது புழக்கத்தில் உள்ளன. இவற்றுள் செயற்கை நுண்ணறிவை உட்புகுத்தும் போது மனிதர்களே நின்று கொண்டுள்ளது போன்று செயல்பட்டு கோபமான, வருத்தமான பதிவுகள் வரும்போது அவற்றை முகத்திலோ, வார்த்தைகளிலோ பிரதிபலிக்காமல் கனிவுடன் பதில் தருவதோடு குரல் ஏற்றத்தாழ்வுடன் பாவனை இன்றி கூறுவதாகவும் செயற்கை நுண்ணறிவு உள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியில் செயற்கை நுண்ணறிவின் எதிர்காலத் தேவை அனைத்துப் பிரிவுகளிலும் தகவல்கள் திரட்டுவதற்கு மிகவும் பயன்படுகிறது. இலக்கியம் சார்ந்த செய்திகள் நூல்வடியில் இருப்பதை ஒலி வடிவில் மாற்றி வழங்குகிறது. இதேபோன்று தேர்வுத் தாள்களில் உள்ள விடைகளை ஒலியாக மாற்றி வழங்கினால் உதவியாக இருக்கும். நேரம் சேமிக்கப்படும். விரைவான வாழ்க்கை சூழலில் இது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

தமிழில் *" Tongue Twister "* என்று சொல்லக்கூடிய நா பிறழ் வாக்கியங்கள் இலக்கியங்களில் அதிகமாக உள்ளன.இவைகளை தெளிவாகக் கற்றுக் கொடுக்கவும் உச்சரிப்பை திருத்தமாக்குவதற்கும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தலாம். சான்றாக திருக்குறளில் *"துறவு"* என்ற அதிகாரத்தில் அமைந்த இரண்டு குறட்பாக்களைச் சுட்ட முடியும். அதாவது நா ஒட்டாமல் உச்சரிக்கக் கூடிய குறட்பாவாக,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இல" (341) என்ற குறட்பாவை குறிக்கலாம்.

முழுவதும் நா ஒட்டிச் சொல்லக்கூடிய குறட்பா , "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" (350) என்பதாகும். இது போன்ற தொடர்களை ஆசிரியர்களின் துணை இன்றி, ஆனால் ஆசிரியர்களைப் போலவே கற்றுக் கொடுக்க செயற்கை நுண்ணறிவு அவசியமாகிறது.

"திருப்புகழ்" போன்ற இலக்கியங்களைப் பாடவும் இதன் இலக்கியச் செய்திகளை சந்த நடையில் கூறவும் இலக்கிய வளம் வாய்ந்த பல மனிதர்களாலேயே இயலாத ஒன்று. இத்தகைய பாடல்களில் உள்ள சந்தச் சிறப்பை எதிர்கால சந்ததியினர் அறிய ஏதுவாக இவற்றை செயற்கை நுண்ணறிவு கொண்டு கற்பிக்க வழிவகை செய்வது அவசியம் ஆகும்.

தமிழ் மொழியின் மொழியியல், இலக்கணம் ஆகியவை தமிழ் மொழியின் கருவூலங்கள் ஆகும். ஆனால் தற்காலத்தில் இவற்றை கற்கவும் கற்பிக்கவும் ஆர்வமும் முயற்சியும் குறைந்து வருவதைக் காண முடிகிறது. இந்நிலையை மாற்ற இவைகளைச் செயற்கை நுண்ணறிவுக்குள் உட்பகுத்தி அதன்வழி எளிமைப்படுத்திக் கற்கச் செய்யும் வழிமுறையும் தேவை. சான்றாக, ண, ந, ன: ல, ழ, ள: ர,ற: போன்ற எழுத்துக்களின் உச்சரிப்பு முறைகளில் பெரும்பாலும் பிழை ஏற்பட்டு வருகின்றன. இவை கொண்டு உருவாக்கப்படும் சொற்களும் வட்டார வழக்கிலும் மாற்றம் பெறுகின்றன. இவற்றின் அடிப்படையில் கற்பிக்கவும் இவற்றில் வரும் பிழைகளைச் சரி செய்யவுமான கற்றல் முறையை செயற்கை நுண்ணறிவின் வழி மேற்கொள்வது அவசியத் தேவை.

சான்று:
"Pipe"-குழாய் - கொளாய் -கீழ் – கொளா

கோழி – கோளி

முட்டை – மொட்டு

பழம் – பளொ போன்ற பல சொற்களைக் கூற முடியும்.

தமிழ் மொழியில் உள்ள "உரிச்சொற்கள்" எனப்படுபவை தமிழ் மொழியின் தொன்மை வளம் ஆகும். தொல்காப்பியத்தில் உரியியலாக தனி ஒரு இயல் அமைத்து தொல்காப்பியரால் தொகுத்துச் சொல்லப்பட்ட உரிச்சொற்கள் எனப்படுபவை அன்றாட வழக்கு சொற்களாக அல்லாமல் இலக்கியங்களில் மட்டுமே பயன்படுத்தக்கூடிய சொற்கள் ஆகும். இத்தகைய உரிச்சொற்கள் பல, சங்க இலக்கியங்களிலும் அதனைத் தொடர்ந்து வந்த பல வகை இலக்கியங்களிலும் காலம் காலமாக இடம் பெற்று வந்தன . ஆனால் தற்காலத்தில் இவை பெரும்பான்மை வழக்குழிந்து விட்டன. எவ்வகை இலக்கிய படைப்புகளிலும் பயன்படுத்தப்படுவதே இல்லை. இந்நிலை தொடருமே ஆனால் தமிழ் மொழியின் தொன்மை சிறப்பு வாய்ந்த உரிச்சொற்களை நாம் இழக்க நேரிடும் .எனவே இத்தகைய உரிச்சொற்களை மீட்டெடுக்க அவற்றைச் செயற்கை நுண்ணறிவுக்குள் கொண்டு வந்து உரிச்சொற்களுடனான வாக்கிய இலக்கியங்களை உருவாக்கினால் அது தமிழ் மொழிக்கு பெருஞ்சிறப்பு சேர்ப்பதாக அமையும்.

இன்றைய இளம் தலைமுறையினரின் தமிழ் எழுத்துக்களில் உள்ள பிழைகளைக் காணும் போது மிகுந்த வேதனை அளிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே எழுத்துப் பிழைகள் ஏராளமாக மலிந்து கிடக்கின்றன. இதழ்கள் உள்ளிட்ட ஊடகங்களில் கூட பல்வேறு எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இவ்வாறு பிழைகளுடன் மொழியை கையாளும்போது நம் கருத்தை எளிதாக மற்றவர்களுக்கு புரிய வைக்க இயலாத சூழல் ஏற்படும். மொழியை பிழையின்றி கையாளுவதே சிறப்பு. எனவே இத்தகைய பிழைகளைச் சரி செய்வதற்கான பயிற்சிகளை செயற்கை நுண்ணறிவின் துணைகொண்டு மேற்கொண்டோமே ஆனால் அது தமிழ் மொழியின் சிறப்பையும் வளத்தையும் காக்க நல்வாய்ப்பாக அமையும்.

தமிழ் நாட்டுப்புறவியல் என்பது தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாக திகழ்பவை எனலாம். இத்தகைய நாட்டுப்புற இலக்கியமானது பல்வேறு வகைகளாக உள்ளன. அவற்றில் நாட்டுப்புற பாடல்களே பல வகைகளில் பாடப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து

நிகழ்வுகளிலும் மனிதர்கள் பாடல்கள் மூலமாக தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். இது பண்டைக்காலம் தொட்டு மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் தற்காலத்தில் இத்தகைய பல பாடல் வடிவங்கள் வழக்கொழிந்து விட்டன. இவற்றை அந்தந்த முறை மாறாது நிலைத்திருக்கச் செய்ய வேண்டுமானால் அவைகளை செயற்கை நுண்ணறிவுக்குள் புகுத்தி அதன் வழி பரவச் செய்தல் அவசியம் ஆகும்.

தொடக்க காலம் தொட்டு இன்று வரை மனித வாழ்வானது சூழல் சார்ந்த வாழ்வாகவே உள்ளது இத்தகைய வாழ்வியல் முறையினை அந்தந்த கால இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன அவைகளின் வழி புழங்கு பொருட்கள் உணவு அவற்றை தயாரித்தல் அவைகளை பயன்படுத்துவதால் இயற்கைக்கு ஏற்படும் நன்மை போன்றவைகளை செயற்கை நுண்ணறிவுக்குள் புகுத்தி அத்துடன் கைவினைக் கலைகள்(மரத்தின் மூலம் ஏர் கலப்பை உருவாக்குதல், கூடை முடைதல், மரக்கட்டில்களுக்கான கயிறு பின்னுதல், கைவினைப் பொருட்களை உருவாக்குதல், இயற்கை உரங்களைத் தயாரித்தல், அவைகளைப் பதப்படுத்திப் பாதுகாத்தல், கூடை முனைதல், மாடுகளுக்கு மூக்கணாங்கயிறு போடுதல்) போன்றவற்றுடன் உணவே மருந்தான நம் சிறந்த வாழ்க்கை முறை போன்றவற்றையும் கட்டாயம் நிலைத்திருக்கவும் வளரச் செய்யவும் செயற்கை நுண்ணறிவின் உதவியால் மட்டுமே சாத்தியமாகும்.

அகராதியியல், தொல்லியல், சுவடியியல், சொற்பொருள் ஆராய்ச்சி, இலக்கணங்களை ஒளி - ஒலித் தொடர் படங்களுடன் *(Videos with audios)* விளக்கிச்சொல்லுதல் ஆகிய தமிழ்த் துறைகளுக்கு செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பு இன்றியமையாதது.

அவசர உலகில் வாழும் நம்மை, நம் மனதைப் புத்துணர்வூட்ட நம் பண்பாட்டுடன் இணைந்த கதைகள், பாடல்கள், நிகழ்த்து கலைகள் ஆகியவைகளையும் செயற்கை நுண்ணறிவின் வழி பரவச் செய்தால் இன்றைய இளம் தலைமுறைக்கு ஏற்படும் "மன அழுத்தம்" என்ற மாபெரும் இன்னலையும் அதனால் ஏற்படும் பல்வேறு தீய விளைவுகளையும் தடுக்க முடியும்.
இவ்வாறாக தமிழ் மொழிக்குள் நுண்ணறிவின் தேவையை எண்ணிப் பார்த்தோமானால் முடிவின்றி அவை தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆக மிக விரைவாகத் தமிழ் மொழிக்குள் செயற்கை நுண்ணறிவினை புகுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

முடிவுரை

கல்தோன்றி மண் தோன்றா காலத்தே உருவான மூத்த குடியாம் நம் தமிழ்க் குடியின் பண்பாட்டையும் அதன் சிறப்புகளையும் உலகம் இருக்கும் அளவும் எடுத்து இயம்பவும் அதை உலகில் உள்ள பல்வேறு பிரிவினரும் கற்றுக் கொள்ளவும் மனிதர்கள் இருக்குமிடமெல்லாம் தமிழும் தமிழின் சிறப்புமிருக்க வேண்டும். அத்தகைய நிலைக்கு அவற்றைப் பரவ செய்வதற்கு மனிதர்கள் மட்டுமல்ல அவர்களுக்கு செயற்கை நுண்ணறிவின் உதவியும் அவசியமாகின்றது. எனவே தமிழைப் பொறுத்தவரை தமிழர்களை பொறுத்தவரை செயற்கை நுண்ணறிவின் தேவை என்பது உடலுக்கு சுவாசம் போன்று இன்றியமையாததாகும். எனவே அனைத்து துறைகளிலும் அதன் அனைத்து பிரிவுகளிலும் செயற்கை நுண்ணறிவை விரைவாகப் புகுத்துவதற்கு வழிகோலுவது அவசியமாகிறது.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமும் அதன் பயன்பாடும்

முனைவர் த.ராஜ்குமார்
இணைப்பேராசிரியர் & தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி
trajkumartamil@gmail.com

உலகின் அனைத்து உயிரினங்களைக் காட்டிலும் மனிதன் உயர்ந்திருப்பதற்கும் சிறந்திருப்பதற்கும் காரணம் சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் உடையவனாய் இருத்தலேயாகும். நெருப்பு மூட்டியது முதல் மின்சாரம் கண்டறிந்தது வரை தன் எண்ணம், சிந்தனைகளால் தனது தேவையை நிறைவேற்றிக் கொண்டான். விலங்குகளும் பறவைகளும் தனது ஆற்றலை வெளிப்படுத்துகின்றனவேயன்றி சிந்தனையை அல்ல. மனிதன் தன் தனித்த சிந்தனை ஆற்றலால் எந்தப் படைப்பையும் ஒன்று போல் அல்லாமல் தன் அறிவு காட்டும் வழி படைத்துக் காட்டுகிறான். ஐம்புலன்களின் மூலம் பெறப்படும் தகவல்களை ஆய்ந்து செயலாற்றி எதிர்காலத்தில் நடப்பனவற்றையும் சிந்திக்கும் திறனைப் பெற்றுள்ளான். தன் சிந்தனைத்திறனைக் கொண்டு மனிதனைப் போலவே செயல்படும் இயந்திர மனிதனைக் கண்டறிந்ததோடு அதையும் தாண்டி நுண்ணறிவோடு திறம்பட செயலாற்றும் செயலிகளையும் கணினியின் துணைகொண்டு கட்டுப்படுத்தும் அறிவையும் வெளிப்படுத்தி வருவதும் சிறப்புக்குரியதாகும்.

அறிவின் படிநிலைகள்

காலந்தோறும் மக்களின் அறிவியல், வானியல், சூழலியல் சார்ந்த அறிவுத்திறனை நம் இலக்கண, இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவ்வகையில் அறிவின் நிலையை வகைப்படுத்திய தொல்காப்பியர்,

> *"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே*
> *இரண்டறி வதுவே அவற்றோடு நாவே*
> *மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே*
> *நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே*
> *ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே*
> *ஆறறி வதுவே அவற்றோடு மனமே*
> *நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" (தொல்.மரபியல்,நூ.1526)*

என நெறிமுறைப்படுத்தியிருப்பதன் மூலம் மற்ற உலக உயிர்களைவிட சிந்தித்து செயல்படும் மனிதன் அறிவாற்றல் மிக்கவனாய் இருப்பதை உணரமுடிகிறது.

தொழில் நுட்ப மாற்றம்

எந்தவொரு தொழில்நுட்ப மாற்றமும் ஒரே நாளில் உருவாகிவிடுவதில்லை. தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை கணினியின் வருகை, இணையப் பயன்பாடு, மின்னணுப் புரட்சி என இவற்றால் உலகம் இன்று ஒவ்வொரு வீட்டின் வரவேற்பறையிலும் சுழன்று கொண்டுள்ளது. இதற்கெல்லாம் மேலாக இன்றைய கணினி உலகம் செயற்கை நுண்ணறிவின் ஆளுகைக்குட்பட்டுள்ளது என்றால் அது மிகையில்லை.

கடந்த காலங்களில் மென்பொருள் ஆண்டுகொண்டிருந்த கணினி உலகத்தை இனி செயற்கை நுண்ணறிவு ஆளப்போகிறது. நம் அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் பொருட்களில் இந்நுண்ணறிவு செயல்பட்டுக்கொண்டுள்ளது. கண்காணிப்புக்கருவி அசைவை நோக்கி நகர்வதும், எந்த இடத்திற்கும் வழிகாட்டும் வரைபட வழிகாட்டியும், தேடுபொறிகளில் தேடக் கிடைக்கும் தரவுகள் அத்தனைக்கும் காரணமாக இருப்பது செயற்கை நுண்ணறிவே.

செயற்கை நுண்ணறிவு – விளக்கம்

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு கணினி, கணினியால் கட்டுப்படுத்தப்படும் ரோபோ அல்லது ஒரு மென்பொருளை மனித மனதைப் போலவே புத்திசாலித்தனமாக சிந்திக்க வைக்கும் ஒரு முறையாகும்.

மனிதனின் பகுத்தறியும் திறனடிப்படையில், கற்றல், பகுத்தாய்தல், திட்டமிடல், உணர்தல், உள்ளுணர்தல், பார்த்தல், கேட்டல் ஆகிய பண்புகளைக் கொண்டு சூழ்நிலைக்கேற்ப முடிவுகள்

மேற்கொண்டு செயல்படுத்தக் கூடிய ஒரு பணியினைக் கணினியினைக் கொண்டு செய்து முடிக்க இயந்திரங்களை உருவாக்குவதாகும். எனவே, இத்துறை அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருவதில் வியப்பேதுமில்லை.

செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம், மனிதர்களோடு சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது; மருத்துவ சிகிச்சையளிக்கிறது. இதழியல் துறையில் இயல்பான மொழிநடையை உருவாக்கும் மென்பொருளானது தகவல்களைக் கொடுத்தால், கட்டுரையை குறைந்த நேரத்தில் உருவாக்கித் தந்துவிடுகிறது. வணிகத்தில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி ஆளற்ற பல்பொருள் அங்காடிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

செயற்கை நுண்ணறிவுத் தாக்கம் பெற்ற துறைகள்

மின்னணு வணிகம்

மின்னணு வணிகம் அல்லது இணைய வர்த்தகத் தளங்கள் செயற்கை நுண்ணறிவின் தனிப்பயனாக்கக் காரணியைப் பயன்படுத்துவதற்கான மிகப்பெரிய தளங்களாக உள்ளன. இது சேகரிக்கும் தரவின் அடிப்படையில் பொருட்களை வாங்குவதற்கான பரிந்துரைகளின் பட்டியலை அளித்து உதவுகிறது.

சமூக ஊடகங்கள்

சமூக ஊடகங்கள் தற்போதைய தலைமுறையினருக்கு முதன்மையான பொழுதுபோக்குத் தளங்களாகும். இங்கு பகிரப்படும் இடுகைகள் மூலம் எண்ணற்ற தரவுகள் உருவாக்கப்படுகின்றன. எங்கெல்லாம் தரவுகள் நிறைந்திருக்கின்றனவோ அங்கெல்லாம் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர வழிக்கற்றல் ஆகியவை தொடர்பு கொண்டவையாக இருப்பதைக் காணமுடிகிறது.

கண்காணிப்பு

செயற்கை நுண்ணறிவானது பாதுகாப்புத் துறையில் பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. தம் எல்லைக்குள் யாரும் அறியாத வண்ணம் ஊடுருவல் போன்ற பல அச்சுறுத்தல்களைக் கண்டறிவதில் பெரும்பங்காற்றி வருகின்றது.

மருத்துவம் - சுகாதாரம்

செயற்கை நுண்ணறிவு இத்துறையில் பெரும்பங்கு வகிக்கிறது. நோயாளிகளைக் கவனிப்பதில், மக்களுக்கு உதவுவதில் இது ஒரு முக்கியமான படியை எடுத்துள்ளது. சுகாதாரப் பயன்பாட்டு வசதிகளில் நோயாளிகளுக்கு முறையான மருந்து மற்றும் சிகிச்சையை உறுதி செய்யும் வகையில் இத்தொழில்நுட்பம் அமைந்துள்ளது.

சீனாவில் பல மருத்துவமனைகளில் மனித இயந்திரங்கள் மனிதர்கள் பணியாளர்களாக உள்ளன. மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் இனம் கண்டு அவர்களுக்கு உதவி வருகின்றன. மேலும் சீனமொழியின் வட்டார வழக்குகளையும் புரிந்து கொண்டு செயலாற்றுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வீடுகளில்

செயற்கை நுண்ணறிவு, வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சாரப் பொருட்கள், பூட்டுகள், கதவுகள் போன்றவற்றிலும் வெளிப்புற வெப்பநிலையைக் கருத்திற்கொண்டு தானாகவே கட்டடத்தின் குளிர்ச்சி மற்றும் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் திறனையும் வழங்குகின்றது.

வாகனங்களில்

செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் வாகனங்களின் நவீனக் கருவிகளின் வழியாகவும் புகைப்படக் கருவியின் வழியும் தரவுகளைச் சேகரித்து வாகனத்தை இயக்கும் கட்டுப்பாட்டு குறியீடுகளை வழங்குகின்றன. சில விலையுயர்ந்த வாகனங்கள் ஏற்கனவே செயற்கை நுண்ணறிவு உணர்திறன்களின் மூலம் இயங்கி வருகின்றன.

வேளாண்மைத்துறையில்

செயற்கை நுண்ணறிவு விவசாயிகளின் பணிச்சுமையைக் குறைக்கும் கருவியாக இல்லாமல் மாறாக அது அவர்களின் செயல்முறைகளை மேம்படுத்தும் பணியைச் செய்கின்றது. வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்றின் வேகம் மற்றும் சூரியக் கதிர்வீச்சு போன்ற விளைச்சலுக்கு உகந்த நுண்ணறிவுகளை அளித்து விவசாயிகளுக்கு உதவி வருகிறது. மேலும் காலநிலை மாறுபாடு, விளைச்சலைக் குறைக்கும் பூச்சிகள் மற்றும் களைகளின் தொற்று போன்ற சிக்கல்களைத் தீர்க்கும் சாத்தியக் கூறுகளையும் வழங்கி வருகின்றன.

மேலும் கல்வி, வானியல் ஆய்வுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

செயற்கை நுண்ணறிவால் இயங்கும் செயலிகள்

தற்காலத்தில் செல்பேசிகளும் சமூக வலைதளங்களும் மனிதனின் உடலுறுப்புகளில் ஒன்று போல ஆகிவிட்டன. பயன் அடிப்படையில், 'செல்' இல்லாமல் எங்கும் செல்வதில்லை என்ற நிலை உருவாகிவிட்டது. தான் செய்யும் அத்தனை வேலைகளிலும் கணினி சார்ந்த பயன்பாடு இருப்பது அவ்வேலையை எளிதாக்குகிறது. எனவே அனைவரும் அன்றாடவாழ்வில் செயலிகளைக் கொண்டே செயலாற்றிக் கொண்டுள்ளனர் எனலாம். இவ்வாறு மக்கள் பயன்படுத்தும் செயலிகள் அனைத்தும் செயற்கை நுண்ணறிவின் துணையோடு திறம்பட செயலாற்றுகிறது.

- *chatgpt - https://chat.openai.com/*
- *bing - https://www.bing.com/*
- *facetune - https://www.facetuneapp.com/*
- *lensa - https://prisma-ai.com/lensa*
- *alexa - https://www.ultimatevoiceassistant.com/*
- *siri - https://www.apple.com/in/siri/*
- *Cleo - https://web.meetcleo.com/*
- *Google assistant - https://assistant.google.com/* இன்னும் பிற. . .

ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டு வளரும் பல கோடி மதிப்பிலான இணையவழி பயன்பாட்டுச் சந்தையானது செயற்கை நுண்ணறிவை ஏற்றுக்கொள்வதற்கான மையமாக மாறியுள்ளது. ஒரு பயனர் புகைப்படத்தைத் திருத்த விரும்பினாலும், புதிய மொழியைக் கற்க விரும்பினாலும் அல்லது தொலைபேசி அழைப்பை எழுத விரும்பினாலும் இப்படியான பயன்பாட்டில் செயற்கை நுண்ணறிவுச் செயலிகள் தவறாமல் இடம் பெற்றிருக்கிறது.

சாட்ஜிபிடி

சாட்ஜிபிடி ஆனது பயனர்களுடன் உரையாடவும், கொடுக்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க, புதிய உரையை உருவாக்க ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பிங்

மைக்ரோசாஃப்ட் பிங் நீண்ட காலமாக இணையத்தை ஆராய்வதற்கான தேடுபொறியாக அறியப்படுகிறது, ஆனால் கேள்விகளுக்கு பதிலளிக்கவும், ஆக்கப்பூர்வமான உரை மற்றும் படங்களை உருவாக்கவும், பல மொழிகளில் எழுதுவதற்கும் மொழிபெயர்ப்பதற்கும் சரிபார்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஃபேஸ்ஆப்

இந்த செயலி பயனர்களின் புகைப்படத்தை மேம்படுத்த உதவுகிறது. முகத்தின் ஒப்பனை, சிகை அலங்காரம் போன்ற அழகியலை தரப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

லென்சா

இதுவும் பயனர்களுக்கு புகைப்படங்களில் கலைத் திருத்தங்கள் மற்றும் மறு செய்கைகளை உருவாக்கும் திறன்களை வழங்குகின்றது.

அலெக்சா

2014 இல் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, அமேசானின் அலெக்சா ஒரு வீட்டுப் பணியாளராக மாறியுள்ளது. அதன் அதிநவீன இயற்கை மொழி செயலாக்கத் திறன்கள் அலெக்சாவை பேசும் மொழியைப் புரிந்துகொள்வது மட்டுமல்லாமல், பயனர்களுடன் எளிமையாக உரையாடவும் அனுமதிக்கின்றன.

***Google* உதவியாளர்**

இது மிகவும் மேம்பட்ட மெய்நிகர் உதவியாளர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. கண்ணுக்குப் புலனாகாத மனிதனைப்போல் நம்முடன் உரையாடி உதவிசெய்கிறது. நாம் கூறுகின்ற கட்டளையை ஏற்று அதன்படி செய்யும். நாம் சொல்வதைக் கேட்பதால், இங்கிவனை யான் பெறவே என்னதவம் செய்துவிட்டேள் என பாரதி கூறுவதுபோல நாமும் மெச்சிக்கொள்ளலாம்.

மேற்கண்ட செயலிகள் அனைத்தும் மக்களுக்கு நாள்தோறும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

பிழை திருத்திகள் - ஆங்கிலம்

பிழையில்லாமல் எழுதுவதுதான் சொல்ல வரும் கருத்தை தெளிவாக உணர்த்துவதற்குரிய வழியாகும். பிழையாக எழுதினாலும் அதைத்திருத்தம் செய்யும் மென்பொருட்கள் அப்பணியைச் சிறப்பாகச் செய்யவேண்டும். பெரும்பான்மையர், பிழையின்றி எழுதும் ஆர்வம் இருப்பினும் அறியாமையாலும் ஐயத்தாலும் தவறாக எழுதி விடுகின்றனர். இவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது கணிப்பொறி வல்லுநர்களின் கடமையாகும். ஆங்கிலமொழி பிழைத்திருத்திகள் கீழ்வருமாறு.

Grammarly - https://www.grammarly.com/

ஆங்கில மொழியில் தயாரிக்கும் ஆவணங்கள், மின் அஞ்சல்கள், முகநூல், இன்ஸ்டாகிராம், ட்விட்டர் பதிவுகள் என அனைத்தையும் திருத்தி அமைக்கும். எம்.எஸ்.வேர்டு சுட்டிக் காட்டும் பிழைகளைக் காட்டிலும் பத்து மடங்கு அளவில் பிழைகளை இது சுட்டிக் காட்டுகிறது. முன் ஒட்டுச் சொற்கள் *(preposition)*, சரியான வினைச்சொல் பயன்பாடு, பெயர்ச்சொல் பயன்படுத்தல் தவறாகப் பயன்படுத்தப்படும் சொற்கள் என அனைத்து வகைகளிலும் இது நமக்கு உதவியாக இருக்கிறது.

Ginger Grammar Checker - http://www.gingersoftware.com/

இணையத்தில் கிடைக்கும், ஆங்கில மொழிப் பயன்பாட்டினை மெருகூட்டித் தரும் ஒரு கருவி 'ஜிஞ்சர்' *(Ginger)*. மேலே சொல்லப்பட்ட 'கிராமர்லி' போலவே, இலவசமாகவும், கட்டணம் செலுத்தியும் இதனைப் பெறலாம். இலக்கண மற்றும் சொல் பிழைகளை இது திருத்துகிறது.

Paper Rater - https://www.paperrater.com/free_paper_grader

இணையத்தில் கிடைக்கும் ஒரு வித்தியாசமான ஆங்கில மொழி திருத்தியாகும். இந்த செயலியும் எழுத்து, இலக்கண, சொல் மற்றும் வாக்கியப் பிழைகளைத் திருத்துகிறது. ஆங்கில மொழியினைப் பயன்படுத்துவதில், எழுதுபவர் அல்லது படிப்பவரின் நிலைக்கேற்ப, உரையைத் திருத்தம் செய்கிறது. கல்லூரி மாணவர், பட்டதாரி, முனைவர் பட்ட ஆய்வாளர் என மூன்று நிலைகளில் எப்படி ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டுமோ அந்த நிலைக்கேற்ப திருத்தங்களை அளிக்கிறது.

After the Deadline - http://www.polishrtywriting.com

இலக்கணப் பிழைகளைத் திருத்தம் செய்து எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்குகிறது.

WebSpellChecker - https://www.spellchecker.net/

இந்த செயலியின் சிறப்பு, ஒரு சொல்லுக்கு அதே பொருளைத் தரும் இன்னொரு சொல்லைத் தரும் எழுத்துப் பிழைகளைத் திருத்துவதுடன், இலக்கண பிழைகளை ஆய்வு செய்து விளக்கங்களைத் தருகிறது.

Online Correction - http://www.onlinecorrection.com/

இந்த *Online Correction* கருவி உங்களின் ஆவணத்தில் எத்தனை பிழைகள் உள்ளன என்று காட்டி, அவற்றை எப்படித் திருத்த வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது சொற்கள், வரிகளுக்கிடையே இடைவெளி சரியாக உள்ளதா என்பதையும் எடுத்துச் சொல்கிறது எழுத்துப் பிழைகள் சிகப்பு கோடு இடப்பட்டுக் காட்டப்படுகிறது. மற்ற பிழைகள், பச்சை வண்ணத்தில் கோட்டுடன் சுட்டிக் காட்டப்படுகிறது.

மேற்கண்ட பிழைத்திருத்திகள் அனைத்தும், ஆங்கில மொழியில் அமைக்கும் ஆவணங்களைத் திருத்தி, சிறப்பாக, உயர்ந்ததாக அமைக்க நமக்கு உதவுகின்றன.

பிழை திருத்திகள் - தமிழில்

ஆங்கிலத்தில் தட்டச்சு செய்தல், சரிபார்த்தல், தொகுத்தல் போன்ற பணிகள் கணினியின் மூலம் எளிதாக நிறைவேறிவிடுகிறது. ஆங்கிலத்தில் உள்ளது போலப் பிழை திருத்தும் *(spell checker)* வசதி தமிழில் இல்லாதது பெருங்குறையாயிருந்தது. தற்போது தமிழில் சில பிழைதிருத்தி மென்பொருள்கள் கிடைத்துவருகின்றன.

நாவி தமிழ்ச் சந்திப்பிழை திருத்தி

இந்த மென்பொருள் செயலியில் வாக்கியத்தைப் போட்டு *"ஆய்வு செய்"* பொத்தானைத் தட்டினால். வலிமிகும் இடங்களை ஆராய்ந்து பரிந்துரைக்கும். அதுபோகக் கணிக்கமுடியாத வார்த்தைகளுக்கு ஏற்ற இலக்கண விதிகளைச் சுட்டிக்காட்டும். வலி மிகாத இடங்களில் தவறாக வலி மிகுந்தாலும் கண்டுபிடித்துக் காட்டும்.

வாணி தமிழ் எழுத்துப்பிழை திருத்தி

இணையவழியில் அனைவரும் பயன்படுத்தும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு வாணி என்ற தமிழ் எழுத்துப்பிழை திருத்தி உருவாகியுள்ளது. நாவியில் பயன்படுத்தியது போல வாக்கியங்களை வாணியில் கொடுத்து *"திருத்துக"* பொத்தானை அழுத்தவும். பின்னர் பிழை திருத்தியபிறகு *"சம்மதம்"* பொத்தானை அழுத்தி, திருத்தங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மென்தமிழ்

இச்செயலி தமிழைப் பிழையற எழுத உதவும் மென்பொருளாக விளங்குகிறது. இதனை, தமிழ்த் தட்டச்சு விசைப்பலகைகள் ***(Tamil Keyboards)***, ஒருங்குறி எழுத்துருக்கள் ***(Unicode Fonts)***, குறியேற்ற மாற்றி ***(Encoding Converter)*** சொற்பிழை திருத்தி ***(Spell Checker)***, சந்திப்பிழை திருத்தி ***(Sandhi Checker)***, தமிழ்ச்சொல் சுட்டி ***(Tamil Word Suggester)***, அகராதிகள் ***(Dictionaries)***, அகரவரிசைப்படுத்தம் ***(Sorting)***, சொல்லடைவு ***(Indexing)***, துணைநூற்பட்டியல் கருவி ***(Bibliography)***, எண்<->எழுத்து மாற்றி ***(Number to Word Converter)*** போன்ற பல வசதிகளுடன் இச்செயலி அமைக்கப்பெற்றுள்ளது.

இவ்வகையான பல பிழை திருத்திகள் தமிழ்க் கணினி உலகிற்கு வந்து கொண்டிருக்கின்றன. எனினும் பயனீட்டாளர் தேவையை இவை ஓரளவு நிறைவு செய்வதாக அமைகின்றன. இன்னும் இத்துறை வளரவேண்டும். இலக்கணப் பிழைத் திருத்தி என்ற நிலையில் பிழை திருத்திகள் உருவாக வேண்டும். அவற்றை எதிர்நோக்கிக் கணினி பயன்படுத்துனர் காத்திருக்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவின் நன்மைகள் மற்றும் தீமைகள்

அறிவியல் வளர்ச்சி மனித வாழ்வை மேம்படுத்துவதாக இருந்தாலும் புதிய கண்டுபிடிப்புகளால் நன்மை இருப்பதைப்போலவே தீமையும் இருக்கத்தான் செய்கிறது. அவ்வகையில் செயற்கை நுண்ணறிவு பல நன்மைகளைத் தரும் அதே வேளையில் மனிதனை சோம்பேறி ஆக்கி விடுமோ என்ற கவலையும் எழுவதாக ஆய்வாளர்கள் பலரும் முன்வைக்கும் கருத்தாக உள்ளது,

- செயற்கை நுண்ணறிவின் நன்மைகள்
  - பிழையற்ற செயலாக்கம்
  - மீண்டும் மீண்டும் வேலைகளில் உதவுகிறது
  - 24/7 கிடைக்கும்
  - சரியான முடிவெடுத்தல்
  - டிஜிட்டல் உதவி
  - வேகமாக முடிவெடுத்தல்
  - ஆபத்தான சூழ்நிலைகளில் செயற்கை நுண்ணறிவை செயல்படுத்துதல்
  - புதிய கண்டுபிடிப்புகள்
- செயற்கை நுண்ணறிவின் தீமைகள்
  - உருவாக்கத்திற்கான அதிக செலவுகள்
  - அதிகரித்த வேலையின்மை
  - படைப்பாற்றல் இல்லாதது
  - முன்னேற்றம் இல்லாதது
  - மனித பிரதிபலிப்பு இல்லை

இருந்த போதும் நன்மையே மேலோங்கி இருக்கும் செயற்கை நுண்ணறிவின் பயனை மறுப்பதற்கில்லை.

தமிழ்மொழிப் பயன்பாட்டில் செயற்கை நுண்ணறிவு

செயற்கை நுண்ணறிவு தமிழ் வழியில் செயல்படுவதைக் காட்டிலும் ஆங்கில வழியில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. தமிழ் மென்பொருள்களின் பயன்பாடும் எண்ணிக்கையும் பெருகியிருந்தாலும் செயற்கை நுண்ணறிவு கொண்டு செயல்படும் செயலிகளில் தமிழ் மொழியில் வினவப்படும் வினாக்களுக்கு போதுமான தரவுகள் இன்மை, உச்சரிப்புகள், ஒலிக்குறிப்புகள் தவறாக வெளிப்படுவதும் காணமுடிகின்றது. எனவே கணினித்துறை சார்ந்த வல்லுநர்கள் இதற்காக முயலவேண்டும்.

கீழ்க்காணும் படங்கள் இரண்டும் *chatgpt* யில் தமிழ்மொழி என்னும் பொருளில் வினவப்பட்டவை. ஆங்கிலத்தில் தமிழ்மொழி குறித்த கருத்துக்களுக்கும் தமிழில் தமிழ்மொழி குறித்த கருத்துக்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் இருப்பதைக் காணமுடிகின்றது. எனவே செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை தமிழ்மொழியில் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான முன்னெடுப்புகளைச் செய்வது அவசியமாகும்.





துணை நின்றவை :

இணையதளங்கள்

- http://manidal.blogspot.com/2017/08/blog-post.html
- https://builtin.com/artificial-intelligence/ai-apps

- *https://rb.gy/og2xe*
- *https://shorturl.at/oprTV*
- *https://www.skillrary.com/blogs/read/use-of-artificial-intelligence-in-agriculture*
- *X th Tamil Book*

Linguistic Translator

Vidhya Kanagaraj
KG College of Arts and Science

Machine translation, the automated conversion of text from one language to another, has witnessed remarkable advancements in recent years, with a growing focus on bridging the linguistic diversity of India. This work presents an overview of the challenges and advancements in machine translation systems designed to facilitate seamless communication between Tamil and English, as well as between various Indian languages.

linguistic diversity in India is characterized by a multitude of languages and dialects spoken across the nation. Tamil and English, being prominent among them, present unique challenges due to their linguistic differences in terms of grammar, vocabulary, and syntax. This abstract delves into the current state-of-the-art approaches employed in machine translation for Tamil-English language pairs, highlighting the application of neural machine translation (NMT) models, deep learning techniques, and the utilization of large parallel corpora to improve translation quality.

Furthermore, the work explores the broader scope of machine translation for inter-Indian language communication. It discusses efforts to develop translation systems between various Indian languages, considering languages like Hindi, Bengali, Telugu, and more. These initiatives not only aim to enhance linguistic accessibility but also promote cultural exchange and economic cooperation within India's diverse linguistic landscape.

The work also touches upon the challenges of translating languages with varying scripts, morphologies, and idiomatic expressions. Additionally, it discusses the importance of domain-specific translation models to cater to diverse sectors like healthcare, education, and e-commerce.

This abstract provides an insight into the evolving landscape of machine translation for Indian languages, with a particular focus on Tamil, English, and inter-Indian language translation. It underscores the importance of continued research and development in this field to foster cross-cultural communication, economic growth, and knowledge dissemination within the Indian subcontinent.

Promoting linguistic accessibility and cultural exchange. Challenges related to different scripts, morphologies, and domains are discussed, broader scope of inter-Indian language translation.

Extractive Summarization of Text Document

M.Shree Gowri[1],V.Srividhya[2]
Final Year MCA[1],Assistant Professor[2]
[1,2]Department Of Computer Science,Avinashilingam Institute for Home Science and Higher Education for Women ,Coimbatore India
shreegowri121@gmail.com[1],vidhyavasu@gmail.com[2]

Abstract

In an era characterized by an exponential growth of information on the World Wide Web, the need for effective text summarization techniques has never been more pressing. Our research addresses this imperative by focusing on the task of extractive summarization specifically tailored for text documents. Text summarization, which falls under AI, has been an important research area that identifies the relevant sentences from a piece of text. This paper presents an **"Extractive Summarization of Text Documents**" approach for generating a short and precise extractive summary for the given text documents. It is crucial due to the growing volume of text data, and it can be categorized into extractive and abstractive methods. In this paper, an extractive approach is employed, involving the selection and concatenation of important sentences or paragraphs from the original text. The objective is to provide concise summaries, which is a challenging task in natural language processing. It comprises four phases: The first phase of the work is loading the input text document. Text preprocessing is done in second phase. The third phase is applying extractive summarization algorithms such as frequency summarizers, Textrank, and Lexrank. The fourth phase of the work is performance evaluation using rough scores .

Keywords : extractive Summarization, rouge scores,Textrank.

Tamil - Ai Powered Legal Documentation Assistant

Dr. Karthikeyan Viswanathan[1],
Mr. Nithin.Y.J [2], Mr. Krishna.P.G[3], Mr. Prasanna.V[4], Mr. Faiz Alam.F[5], Mr. Nitheshwaran K[6]
Associate Professor[1], Pre-Final year[2,3,4,5,6]
[1,2,6] Department Of Mechanical Engineering, Sri Krishna College of Technology, Coimbatore, India
[3,4,5] Department Of Computer Science Engineering, Sri Krishna College of Technology, Coimbatore
Karthickeyan.v@skct.edu.in [1], 727821tume103@skct.edu.in [2], cseskct153prasanna.v@gmail.com [4]

ABSTRACT

Artificial intelligence is expected to revolutionize the legal profession by becoming an indispensable tool in the creation and management of legal documents. Legal documentation can be complicated and a time consuming process, especially for the individuals, who may not have access to legal resources and find it difficult to understand and follow-up. The language and jargon used in legal documentation are high in vocabulary and can lead to errors and misunderstandings. Tamilians with speech and hearing impairments face higher possibilities of difficulties in understanding and dealing with legal documentations. The objective is to develop an AI – powered solution that can simplify and translate the documentation into Tamil, by automatically drafting legal documents in plain language and using easy to understand terms. An App or a website that can analyze, review and give translation to complicated terms in the legal documents to the people for better understanding, powered with AI-algorithm.

An User-Friendly Interface for inputting relevant information such as parties involved, terms and conditions of the agreement and other necessary information. AI – powered documentation generation that automatically drafts the legal documents as per the input data given and also translates the legal terms and documents in Tamil. It has the ability to resolve the queries and doubts of the users in an efficient manner. Integration with existing legal resources and database to ensure accuracy and completeness of the legal documents. Option for the user to seek the end results in descriptive form, voice assistant and ASL sign language.

STUDIO
KCT
Explore..Capture..Inspire..

KUMARAGURU

ENGINEERING | LIBERAL ARTS | AGRICULTURE | MANAGEMENT
BUSINESS INCUBATION | TAMIL RESEARCH

KUMARAGURU COLLEGE OF TECHNOLOGY
Character is life

KCT BUSINESS SCHOOL

KCLAS KUMARAGURU COLLEGE OF LIBERAL ARTS AND SCIENCE

KUMARAGURU INSTITUTE OF AGRICULTURE

KUMARAGURU SCHOOL OF BUSINESS

KRiA KUMARAGURU RESEARCH & INNOVATION ALLIANCE

KUMARAGURU SCHOOL OF INNOVATION

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

FORGE

SEA SAKTHI EXCELLENCE ACADEMY
Career Integrated Education

N.MAHALINGAM TAMIL RESEARCH CENTRE

KCT TECH PARK

KARE Kumaraguru Action For Relief And Empowerment

Dr.N.MAHALINGAM CHESS ACADEMY

CHARACTER IS LIFE

25 UG, 20 PG, 12 R&D Centres, 75+ MoUs, 71 Patented Projects, 60 Student Clubs & Forums, 182+ Laboratories, 900+ Faculty & Staff, 8000+ Students, 29,000+ Alumni, 1 Lakh+ Books in the Library, 100 Startups Incubated, 60+ Products/ technologies commercialised at Forge, 80,000 Scholastic Tamil Books in NMTRC, 8 MNCs in KCT Tech Park, 292 Acres of three Sustainable Campuses with 6000+ trees of 100+species, Resource Recovery Park.